# இறையியல் கோலங்கள்

வடிவம் 30 ஜனவரி – ஜூன் 2014 வண்ணம் 1

தொடக்க திருச்சபை முன்வைக்கும் மாற்றுச் சமுதாயம்

காலத்தின் தேவையில் திருச்சபை...

சீடத்துவ வாழ்வின் பண்புகள்

செபம் பற்றிய லூக்கா நற்செய்தியின் பார்வை

மனித மாண்பை வேரறுக்கச்செய்யும் கருவழிப்பு

குடும்பங்கள் – தூய ஆவி குடிகொள்ளும் ஆலயங்கள்...

தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


| | | |
|---|---|---|
| Vol | : | 30 |
| No. | : | 1 |
| January - June | : | 2014 |

| | | |
|---|---|---|
| வடிவம் | : | 30 |
| வண்ணம் | : | 1 |
| ஜனவரி – ஜூன் | : | 2014 |



புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

ஆசிரியர்: அருட்தந்தை மை.ஆ.போ.ற.சவுந்தரநாயகம்

துணை ஆசிரியர்கள்: அருட்தந்தை அ.யோ.ஜெயசீலன்
அருட்தந்தை ரி. ரவிராஜ்

நிர்வாகக்குழு: அருட்சகோ.பி.ஜோண் றெக்ஷன்
அருட்சகோ. ஒ. றி. ரெறன்ஸ்
அருட்சகோ. அ. துஷ்யந்தன்
அருட்சகோ. A. அல்வின் கிருபாகரன்
அருட்சகோ. V. அருட்செல்வன்

வெளியீடு: தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Editor: Rev.Fr.M.A.P.R. Savundranayagam

Sub Editors: Rev. Fr. A.J. Jeyaseelan
Rev. Fr. T.Raviraj

Administrative Board: Rev. Bro.P.John Rexon
Rev. Bro.R.O.Terance
Rev. Bro.A.Thushyanthan
Rev. Bro.A. Alvin Kirubaharan
Rev. Bro.V. Arutchelvan

Publication: St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel. No.: 021 222 2482, 021 222 7145

# உள்ளே


◈ ஆசிரியர் உரை

◈ தொடக்க திருச்சபை முன்வைக்கும் மாற்றுச் சமுதாயம்

அருட்பணி. ம. இரவிச்சந்திரன்

◈ காலத்தின் தேவையில் திருச்சபை - ஏழைகளின் திருச்சபை

அருட்சகோ. பி. டினேஷன்

◈ சீடத்துவ வாழ்வின் பண்புகள்

அருட்பணி. P. தயாபரன்

◈ செபம் பற்றிய லூக்கா நற்செய்தியின் பார்வை

அருட்சகோ. P. தயாளன்

◈ மனித மாண்பை வேரறுக்கச்செய்யும் கருவழிப்பு

நி. மரிய பெய்லன் குரூஸ்

◈ குடும்பங்கள் - தூய ஆவி குடிகொள்ளும் ஆலயங்கள்...

அருட்சகோ. அ. துஷ்யந்தன்

◈ SYNOPSIS

## ஆசிரியர் உரை

திருச்சபையினதும் அதன் மிகமுக்கிய பகுதியினராக விளங்கும் பொதுநிலைக் கிறிஸ்தவர்களினதும் ஆன்மீகவாழ்விற்கு ஒழுக்க நெறியை பிரமாணிக்கமாக கடைப்பிடிக்க உதவும் வகையில் இந்த இதழின் உள்ளடக்கம் அமைந்திருப்பது சிறப்பு.

தொடக்ககால திருச்சபையை மீண்டும் திரும்பிப்பார்த்து காலத் தின் தேவை திருச்சபை ஏழைகளின் திருச்சபையாக விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் முதல் இரண்டு ஆக்கங்கள் அமைந்துள்ளன. பார்வையற்ற பார்த்திமேயு பார்வைபெறும் நிகழ்வை பயன்படுத்தி சீடத்துவ வாழ்வின் பண்புகள் சிலவும் லூக்கா நற்செய்தியாளரின் பார்வையில் செபத்தின் முக்கியத்துவமும் தொடர்ந்துவரும் இரண்டு ஆக்கங்களில் வெளிக் கொணரப்படு கின்றன. இன்றைய உலகில் மனிதமாண்பை வேரறுக்கச் செய்யும் கருவழிப்பு பற்றிய ஆய்வும், கிறிஸ்தவ குடும்பங்களை தூய ஒளி குடிகொள்ளும் ஆலயங்கள் என்ற காத்திரமான நினைவு படுத்தலும் இறுதியான இரண்டு ஆக்கங்களாக வாசகர்களை சிந்திக்கவைத்து நிற்கின்றன.

குருக்களும் பெரியகுருமட அருட் சகோதரர்களும் எமக்கு தருகின்ற இந்த இறையியல் கட்டுரைகள் பலருக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமே இல்லை. கவனமாகவாசிப்போம். பயன் பெறுவோம். பகிர்ந்து கொள்வோம்.

Fr. M.A.P.R. Savundranayagam

# தொடக்க திருச்சபை முன்வைக்கும் மாற்றுச் சமுதாயம்

அருட்பணி. ம. இரவிச்சந்திரன்

இயக்குநர், யாழ். மறைமாவட்ட அன்பிய, இளையோர் பொதுநிலையினர் ஆணைக்குழு.

திருச்சபை ஒரு மறை பொருள் என்று அழைக்கிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம். (தி.எண்.1) மூவொரு இறைவனின் மறைபொருளிலே அடியிடப்பட்டு (தி.எண்.4,2,3) கிறிஸ்துவின் மறையுடலாக (தி.எண்.7) அவரது அருள் அடையாளமாக (தி.எண்1) அது திகழ்கிறது. திருச்சபையை ஒரு உலக நிறுவனமாக பார்க்கும் சங்கத்திற்கு முந்திய பார்வையை புரட்டிப் போட்டு அதனை உயிர்ப்புள்ள என்றும் புதிதாய் மலர்கின்ற மறைபொருளாக பார்க்கின்ற இந்த புதிய பார்வை திருச்சபையின் இயல்பை மீண்டும் மீண்டும் பட்டை தீட்டி பார்த்து ஆழமான அழகிய உட்பொருளை விளங்கிக் கொள்ள எம்மை அழைக்கிறது.




அந்த வகையில் இக்கட்டுரை தொடக்க திருச்சபை எவ்வாறு தனது சமகால சமூகக் கட்டமைப்புக்கு எதிரான ஒரு மாற்றுச் சமூதாயமாக வாழ முயன்றது என்ற உண்மையைப் படம் பிடிக்க முயல்கிறது. இதனை முன்வைப்பதன் மூலம் திருச்சபை இன்றும் எவ்வாறு ஆதிக்க அமைப்பு முறைக்கு எதிரான மாற்றுச் சமுதாயமாகத் திகழ அழைக்கப்படுகிறது என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### இயேசுவின் மாற்றுச்சிந்தனை

தொடக்க திருச்சபை முன்வைக்கும் மாற்றுச் சமூதாய முயற்சி அடிப்படையில் இயேசுவின் இறையாட்சி போதனையிலும் அவரது வாழ்நாள் சாதனையிலும் அடியிடப்பட்டதாகும். இயேசுவின் போதனைகளும் அவரது

வாழ்க்கை முறையும் தன்னை ஏற்றுக் கொண்ட தன் சீடர்களின் வாழ்விலே அவர் ஏற்படுத்த முயன்ற மாற்றமும் அவரை ஒரு மாற்றுச் சிந்தனையாளராக எமக்கு அறிமுகம் செய்கின்றன. தனது சமகால கிரேக்க, உரோம, யூத சமுதாயத்தின் கட்டமைப்பு மீது, அதன் இயங்குதளங்கள் திசைகள் மீது இயேசு வேரோட்டமான விமர்சனப் பார்வையை கொண்டிருந்தார் என்பது நான்கு நற்செய்தி நூல்களையும் படிக்கும் போது மிகத் தெளிவாகப் புரிகின்றது.

இயேசுவின் சமகாலச் சமுதாயமானது ஒரு கூம்பு வடிவில் அமைக்கப்பெற்ற ஆதிக்க கட்டமைப்பாக அமையப் பெற்றிருந்தது. சிறு தொகையினர் ஆள்வோராகவும் இன்னும் சிறு தொகையினர் இடைநிலையாளராகவும் மிகப் பெருந்தொகையானவர்கள் ஆளப்படுவோராகவும் இக்கட்டமைப்பில் காணப்பட்டனர். இந்த அமைப்பில் ஆதிக்க சக்தியின் அனைத்து அழுத்தங்களையும் தாங்கிக் கொள்ளும் கீழ் மட்ட மக்களின் நிலை மிகப் பரிதாபமாக இருந்தது. இந்நிலை பாவம் நிறைந்தது, மிகவும் தீமையானது, அடிப்படையில் இறைத்திட்டத்திற்கு முரணானது என இயேசு அடையாளம் கண்டார். இந்தப் பின்னணியில் தான் ஒரு மாற்றுச் சமுதாயமாக இயேசு இறையாட்சி பற்றிய கனவை உருவாக்கிக் கொள்கிறார்.



ஒரு சிலரிடம் சொத்து குவிந்திருப்பதனால் ஏற்பட்டுள்ள பணக்காரன் ஏழை என்ற பிளவுக்குப் பதிலாக ஒவ்வொருவரும் தன்னிடமுள்ளதை விருப்போடு பகிர்ந்து கொள்வதன் மூலம் தோன்றும் இறையாட்சி, பொருளாதார சமத்துவமுள்ளதாக அமையும். உரோமன், கிரேக்கன், யூதன் என இனரீதியாக பிளவுபட்டிருக்கும் இந்த உலக ஆட்சிக்கு பதிலாக இறையாட்சியில் நாம் அனைவரும் ஒரே வானகத் தந்தையின் பிள்ளைகள் என்ற சகோதரத்துவம் உருவாகும். ஒருவர் மீது மற்றவர் ஆதிக்கம் செலுத்தி அடக்கியாளும் நிலை மாறி இறையாட்சியின் தலைமை என்பது பணியாக மாறும். ஒருவர் மற்றவனின் பாதங்களை கழுவுவதே இலட்சிய நெறியாக அமையும். அங்கு கட்டாயப்படுத்தலோ வன்முறையோ இருக்காது அன்பு வழியே மாற்றங்களை ஏற்படுத்தும் மந்திர வழியாகும். ஒரு கன்னத்தில் அறைபவருக்கு மறு கன்னத்தை காட்டுவதும், வெளியாடையைப் பறிப்பவர்களுக்கு உள்ளாடையை கொடுப்பதுமே புதிய சமுதாயத்தை முன்னெடுக்கும் வழியாக அமையும். இத்தகைய ஒரு மாற்றுச் சமுதாயத்தின் மூலம் சமகால சமூக கட்டமைப்பால் பாதிக்கப்பட்டிருந்த

பெரும்பான்மையினருக்கு ஒரு புது வாழ்வு வழங்க விளைந்தார். அத்தோடு தம்மைப் பின் சென்றோர் இவ்வாறுதான் வாழ வேண்டும் என்ற தெளிவான அழைப்பையும் அவர் விடுத்திருந்தார்.

இயேசுவின் இந்த இறையாட்சிக் கனவை நடைமுறைப்படுத்திப் பார்க்கும் ஒரு பரிசோதனைக் களமாகத்தான் தொடக்கதிருச்சபையின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது.

## தொடக்க திருச்சபையின் வாழ்க்கை

தொடக்க திருச்சபையின் வாழ்க்கை முறையை நாங்கள் திருத்தூதர் பணி நூலிலிருந்தும், திருமுகங்களிலிருந்தும் இன்னும் நற்செய்தி நூல்கள் மீதான ஆய்வுகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். இருப்பினும் திருத்தூதர் பணி நூலின் 2:44-45 மற்றும் 4:32-35 ஆகிய பகுதிகள் தொடக்க திருச்சபையினர் அல்லது முதல் கிறிஸ்தவர்கள் வாழ முயன்ற இலட்சிய வாழ்க்கை முறையை சுருக்கமாகத் தருகின்றன. இப்பகுதிகள் சொல்கின்றபடி பின்வரும் ஆறு முக்கிய பண்புகளை தொடக்க திருச்சபையின் பண்புகளாக அடையாளம் காணலாம்.



1. திருத்தூதரின் படிப்பினைக்கு செவிமடுப்பது
2. அப்பத்தை பிட்டு உண்பது
3. இறைவேண்டலில் ஈடுபடுவது
4. நட்போடு உறவாடுவது
5. சொத்துக்களை பொதுப்பொருளாக கொண்டு பகிர்ந்து வாழ்வது
6. நற்செய்திக்கு வாழ்வாலும் போதனையாலும் சான்று பகர்வது

இவற்றுள் முதல் மூன்றும் இவர்களை இறையாட்சி வாழ்க்கை முறையில் ஊன்றுவதற்கு, ஊட்டம் பெறுவதற்கு உதவும் பண்புகளாக கருத முடியும்.

தமது இலக்கு வாழ்வில் உறுதியோடு நிலைத்து நிற்க அவை அவர்களுக்கு துணை புரிகின்றன. ஏனைய மூன்றும் அவற்றிலிருந்து வெளிப்படும் இறையாட்சி வாழ்வு முறைக்குரிய பண்புகளாகும். இந்த வெளிப்பாடுகள் இயேசுவின் இறையாட்சி பற்றிய கருத்துக்களுக்கு நடைமுறை வடிவம் கொடுப்பவையாக அமைந்திருப்பதால் மாற்றுச் சமுதாயத்தின் வித்துக்களாக காணப்படுகின்றன.

### தொடக்க திருச்சபை ஒரு மாற்றுச் சமூகமாக


"கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டவர்கள். இனி உங்களிடையே யூதர் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக்குடிமக்கள் என்றும் ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்".(கலா 3:27-28)

திருத்தூதர் பவுல் கலாத்தியருக்கு எழுதிய தமது கடிதத்தில் கையாளும் மேற்படி மேற்கோள் தொடக்க திருச்சபையில் திருமுழுக்கு வழங்கப்பட்டபோது பயன்படுத்தப்பட்ட அறிவுரைப்பகுதிகளாக இருந்திருக்க வேண்டும் என்பது அறிஞர்களின் முடிவு. ஆகவே திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்களாக வருவோருக்கு ஆரம்பம் முதலே திருச்சபை முன்வைக்கும் இலக்கு வாழ்வை பார்ப்போமானால் அதில்

* யூதர் என்றும் கிரேக்கர் என்றும் - இனபேதம்
* அடிமைகள் என்றும் உரிமைக்குடிமக்கள் என்றும் - வர்க்கபேதம்
* ஆண் என்றும் பெண் என்றும் - பால் வேறுபாடு

ஆகிய மூன்று முக்கிய வேறுபாடுகளை அவர்கள் கடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவது புலனாகிறது. ஒரு வகையில் பாவ வாழ்வுக்கு இறந்து புதுவாழ்வுக்கு உயிர்ப்பது என்பது இத்தகைய வேறுபாடுகளுக்கு இறந்து கிறிஸ்து இயேசுவில் கொள்ளப்படும் நம்பிக்கையின் அடிப்படையிலான வர்க்க, இன, பால் பேதங்களற்ற ஒரு புதிய வாழ்க்கை முறைக்கு உயிர்ப்பது என்றாகின்றது. இது நிச்சயமாக அன்றைய புற இன சூழமைவில் ஒரு மாற்று வாழ்க்கை முறையேதான். பலம் பொருந்திய உரோமை சாம்ராச்சியத்திற்கும், ஆழமாக வேரூன்றியிருந்த கிரேக்க கலாச்சாரத்திற்கும், இறுக்கமடைந்திருந்த யூத பண்பாட்டுக்கும் மாற்றாக தொடக்க கிறிஸ்தவர்கள் சிறிய சிறிய குழுக்களில் இம் மாற்ற வாழ்க்கை முறையை வாழ முயன்றனர்.

காலஓட்டத்தில் இது தோல்வியில் முடிந்தாலும் கூட இயேசுவை பின் சென்றவர்களின் இம்முயற்சி வியந்துரைக்கத்தக்கதே. ஒரு விதத்தில் கோலியாத்தின் முன் கூழாங் கற்களோடு செல்லத் துணிந்த தாவீதின் துணிவுக்கே இவர்களது முயற்சியை ஒப்பிட முடியும். இவர்கள் செய்த இம் முயற்சி தோல்வியில் முடிந்தாலும் இயேசுவையும் அவரது போதனைகளையும் பின்பற்ற விரும்பும் எல்லோருக்கும் உரிய உயர் இலக்காக இவ்வாழ்க்கை முறை முயற்சி அமைந்திருக்கிறது. காலங்காலமாக இயேசுவை பின்செல்லும் இலட்சிய வாழ்வால் உந்தப்படும் ஒவ்வொருவரும் தொடக்க திருச்சபையின் மாற்று வாழ்க்கை முறையை தமது சூழமைவுக்கேற்ப வாழ முயல்வதனாலே இந்த மாற்றுச் சமூக முயற்சியை தோல்வியடைந்த ஒன்றாக கருத முடியாது என்ற வாதமும் பொருத்தமானதே.



தொடக்க திருச்சபையின் மாற்றுச் சமுதாய பரிசோதனைக்கு அடிப்படையாக இருந்த நான்கு போக்குகளை இறையியலாளர் அலோய் பீரிஸ் அடையாளம் காண்கிறார்.

அனைத்தையும் பொதுப் பொருளாகக் கொண்டு தம்மிடம் உள்ளதை பகிர்ந்து வாழ அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியே முதலாவதாகும். இம்முயற்சி செல்வந்தர், வறியவர் என்று பிளவுபட்டிருந்த அன்றைய யூத, கிரேக்க, உரோமைய சமுதாயத்திற்கு ஒரு முயற்சியாகும். செல்வந்தரை செல்வத்திலிருந்தும் வறியவரை வறுமையிலிருந்தும் பிரிப்பதன் மூலம் இருவரையும் பேராசையிலிருந்து பிரித்து வர்க்க இடைவெளியைக் குறைத்து ஒரு புதிய சமுதாயம் படைக்க இப்பரிசோதனை முயற்சித்தது.

அவர்களது இரண்டாவது முயற்சி சிறு குழுமவாழ்வாகும். பெரும் படைப்பலம், ஆயுத பலம், அமைப்பு பலம் என்பவற்றோடு இருந்த உரோமைய சாம்ராட்சியத்தை எதிர் கொள்வதற்கு முதல் கிறிஸ்தவர்கள் தெரிந்து கொண்ட வழி சிறிய குழுக்களை உருவாக்குவதாகும். கோலியாத்துக்கு தாவீது சவால் விடுத்தது போல மாபெரும் உரோமைய சாம்ராட்சியத்திற்கு மிக விரைவாக பரவிய கிறிஸ்தவர்களின் சிறு குழும வாழ்க்கை முறை பெரும் சவாலாக அமைந்தது. கூம்பு வடிவில் காணப்பட்ட அதிகார அமைப்புக்களில் கட்டப்பட்ட

ஆதிக்க சமுதாயத்தை ஒரு மைய வட்டமாக, சமத்துவ வடிவமாக மாற்றியது இம்முயற்சி. முதலாவது முயற்சி பொருளாதாரரீதியான சமத்துவத்தை கோரி நிற்க இது சமுகரீதியான சமத்துவத்தை கோரியது.

இந்த முயற்சிக்கு வலுச்சேர்ப்பதாக காணப்பட்டதுதான் இவர்களது மூன்றாவது செயற்பாடான நற்கருணைப்பக்தி இன்றைய வார்த்தையில் சொல்வதென்றால் இது சமுகத்தின் மாற்றத்திற்காக அருட்சாதனம் ஒன்றை உருவாக்கும் முயற்சியாகும். உயர் பீடங்களின் முன்னால், அதிகாரம் பொருந்தியதாக கருதப்பட்ட தெய்வங்களுக்கு முன்னால், முழந்தாட் படியிட்டு அச்சநடுக்கத்தோடு ஆதிக்க சக்திகளின் கடவுளருக்கு ஆராதனை செலுத்திய உரோமைய சமயச் சடங்குக்கு மாற்றாக ஒரு உணவு மேசையைச் சுற்றியமர்ந்து ஆணென்றோ பெண்ணென்றோ, உரோமன் என்றோ கிரேக்கன் என்றோ, அடிமை என்றோ உரிமைக் குடி மக்கள் என்றோ வேறுபாடில்லாமல் ஒரு கிண்ணத்தில் உண்டு ஒரே கிண்ணத்தில் பருகும் இவர்களது வழிபாடு அவர்களது மாற்றுச் சமுதாய முயற்சிக்கு வலுச்சேர்த்தது. கூம்பு வடிவிலான அதிகார மையமாக அமைப்புப் பெற்றிருந்த உரோமைய ஆட்சியின் தலை விதியையே மாற்றியமைத்து சமத்துவ சமுதாயம் படைக்கக்கூடிய புதிய சமுதாயத்துக்கான ஊற்றாக இந்த நற்கருணை பந்தி மாறத் தொடங்கியது.

மாற்றுச் சமுதாயத்திற்கு அடித்தளமாக அமைந்த நான்காவது செயற்பாடு கிறிஸ்தவர்கள் மத்தியில் தோன்றிய புதிய தலைமைத்துவ முயற்சியாகும். ஆதிக்க மைய, ஆண்மேலாதிக்க தலைமைக்கு மாற்றாக பணி புரியும் புதிய தலைமைத்துவ வடிவங்கள் தோற்றம் பெற்றன. திருத்தூதர் பணி, இறைவாக்கினர் பணி, போதகர் பணி என்பன இத்தைகைய பணிகளாகும். இப்பணிகள் அனைத்தும் வெறுமனே ஆண்களால் மட்டும் ஆற்றப்படவில்லை பெண்களும் அப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கு புதிய ஏற்பாடு சான்று பகர்கிறது. (தி.பணி 21:9 உரோ 16:7 தி.பணி 18:24-28)

தொடக்க திருச்சபையின் இத்தகைய மாற்றுச் சமுதாய உருவாக்கத்திற்கான முயற்சி சில பத்தாண்டுகளின் பின் தோல்வி காண ஆரம்பித்தாலும் (இக்காரணங்கள் பிறிதொரு ஆய்வுக்குரியது) ஏற்கனவே கூறியது போல் கிறிஸ்தவத்தை சம காலத்திற்கு பொருத்தப்பாடுள்ளதாக்கி வாழ முயலும் எவரும் நம்பிக்கையோடு உற்று நோக்கி பாடங்களைக் கற்றுக் கொள்ளக்கூடிய பயன்தரு முயற்சி இதுவாகும். அந்த வகையில் எம் மத்தியில் இன்று உண்மைத் திருச்சபையாக, இயேசுவின் போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து வாழ விரும்பும் திருச்சபையாக, வாழ முயல்வோர் தொடக்க திருச்சபையிடம் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களை நோக்குவது பொருத்தமானதாகும்.

இயேசுவின் சம காலத்தில் எப்படி சமுதாயம் ஒரு கூம்பு வடிவில் அமைந்து அனைத்து நலன்களும் ஆதிக்க சக்திகளின் கையில் குவிந்திருந்ததோ அது போலவே இன்றைய உலகும் ஆதிக்க சக்திகளின் கைகளிலேயே தங்கியிருக்கிறது. சர்வதேச அளவிலே பல தேசிய கம்பனிகளும் அரசியல் பொருளாதார ஏகாதிபத்திய அரசுகளும் தமது ஆட்சியை செலுத்தி வருகின்றன. தேசிய அளவில் இனவாத பேரரசும் பேரினவாத சக்திகளும் கோலோச்சுகின்றன. உள்ளூர் கிராம சமூக மட்டங்களில் சாதிய, சமய, சமூக பிற்போக்கு வாத சக்திகள் தமது செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஆக சர்வதேசம் முதல் எமது கிராமங்கள் வரை ஆதிக்க சக்திகளின் நலன்களைப் பேணும் கட்டமைப்புக்களே காணப்படுகின்றன. முற்போக்கு சக்திகளாக இயங்க வேண்டிய சமய சமூக அமைப்புக்களும் மேற்சொன்ன ஆதிக்க சக்திகளின் வலையில் வீழ்ந்து அவற்றுக்கு முண்டு கொடுப்பவையாக மாறிவிட்டன. இந்நிலையில் இயேசுவின் மாற்றுச் சமுதாயச் சிந்தனை மிகவும் அவசியமாக தேவைப்படுகிறது. தொடக்க திருச்சபையின் மாற்றுச் சமுதாய ஆக்க முயற்சி காலத்தின் தேவையாகிறது.

வாளோடும் கேடயத்தோடும் வந்த கோலியாத்தை கவணோடும் கல்லோடும் எதிர்கொண்ட தாவீதைப் போல நாங்களும் மாற வேண்டிய தேவை உருவாகியுள்ளது. தொடக்க கால திருச்சபையினர் எவ்வாறு சிறு சிறு குழுக்களாக மாற்றுப் பண்பாட்டை வாழத்தொடங்கினார்களோ அது போல நாமும் குழுமங்களில் இம் மாற்றுப் பண்பாட்டை வாழத் தொடங்க வேண்டும். எமது பங்குகளில் இயங்கும் அன்பியங்கள் இம் மாற்றுப் பண்பாட்டின் மையங்களாக வேண்டும். சமூக மாற்றத்துக்கான கேள்விகள் அங்கு வேண்டும். சிந்தனைகள் பரிமாறப்படவேண்டும். எல்லா வித ஆதிக்க சக்திகளும் நிராகரிக்கப்பட்ட சமத்துவ சமுதாயம் ஒன்று அன்பியங்களில் வாழப்பட வேண்டும். எமது அன்பியங்கள் இன்று புத்துலகின் வித்துக்களாக வேண்டும்.

எமது நற்கருணைப் பந்திகளும் ஏனைய அருள்அடையாளங்களும் சமூக மாற்றத்தின் அருட்சாதனங்களாக மாற வேண்டும். இறையாட்சியின் சமத்துவ, சகோதரத்துவ பாடங்களைப் பழகும் பள்ளிகளாக இவை மாற வேண்டும். வெறுமனே சடங்குகளாக வாய்ப்பாடுகளாக அல்லது பக்தி முயற்சிகளாக முடியாமல் புத்துலகக் கனவுகளைத் தொற்ற வைக்கும் அருள்அடையாளங்களாக அவை இருக்க வேண்டும். அப்போதுதான் இயேசு விரும்பிய இறையாட்சியின் நீட்சியை நிகழ்காலத்துக்கு உரியதாக்க முடியும். முன்வருவோமா?

# காலத்தின் தேவையில் திருச்சபை – ஏழைகளின் திருச்சபை

அருட்சகோ. பி. டினேஷன்
4ம் வருட இறையியல்

## முன்னுரை

அறிவியலின் அசுர வளர்ச்சியும் நவீன கண்டுபிடிப்புக்களும் மனிதனின் தேவைகளையும் விருப்புக்களையும் இலகுவாக்குகின்றன. இது ஒருபுறமிருக்க மறுபுறத்திலே போரும், வன்முறையும், பொருட்களின் விலையேற்றமும், சுரண்டலும் மனிதனின் இருப்பை நிலைகுலையச் செய்கின்றன. இதனால் மனிதன் மத்தியிலே கவலையும், ஏக்கமும், வாழ்க்கையில் பற்றற்ற நிலைகளும் இழையோடுகின்றன. இத்தகைய சமூகத்தோடு பயணிக்கும் எமது திருச்சபையும் "காலத்தின் அறிகுறிகளை" (மத். 16:3) கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய நிலையில் உள்ளது. 2ம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்று 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் திருச்சபையானது தனது இருப்பை சங்கத்தின் ஒளியில் மீண்டுமொருமுறை புதுப்பித்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். மக்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் சூழ்நிலையில் காலத்தின் தேவைக்கேற்ப நற்செய்தியின் ஒளியில் விடைகாண வேண்டியது திருச்சபையின் தலையாய பொறுப்பாக இருக்கின்றது. இக்கட்டுரை மக்கள் எதிர்கொள்ளும் ஏழ்மை, வறுமை போன்ற பிரச்சினைகளை இறை ஒளியில் சிந்திக்க முயலுகின்றது.

## பழைய ஏற்பாட்டில் ஏழைகள்

பழைய ஏற்பாட்டிலே ஏழைகளைப்பற்றி நிறைய விடயங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. ஏழைகளின் உழைப்பை உறிஞ்சி, அவர்களின் கூலியைப் பறிப்பவர்கள் இரத்த வெறியர்கள் என சீராக் ஆகமம் கூறுகின்றது. (சீராக். 34:20-22). ஏழை எளியோருக்கு கொடுமை இழைத்தல் என்பது வன்முறையால் ஏழைகளின் இரத்தத்தை சிந்த வைப்பதாகும். (எரே. 23:3) இச்செயற்பாடுகளை செய்பவர்கள் ஆதிக்கவாதிகளான அரசர்கள், நீதிபதிகள், செல்வந்தர்கள். இவர்களின் இறுதி நாட்கள் நிம்மதியற்றதும், உறவுகளற்றதுமாய் அமையுமென எச்சரிக்கின்றார். இறைவாக்கினர் பார்வையில் வறுமையானது இயற்கையின் நியதியோ இறைவனின் சித்தமோ அன்று. மாறாக அது மனித அநீதிச் செயல்களின் விளைவு. இத்தகைய அநீதியாகிய கொடிய வரிகளையும் (ஆமோ.

511-12) கள்ள வியாபாரத்தையும் (ஆமோ. 8:45) ஏழைகளுக்கு எதிராக சட்டங்களை தீர்ப்புக்களை வழங்குபவர்களையும் (எசா. 10:1-2, 32:7, எரே. 5:26-29) இறைவாக்கினர் வன்மையாக கண்டிக் கின்றார்கள்.




பழைய ஏற்பாட்டின் பார்வையில் ஏழ்மை நிலை சரியானது அன்று. சாதாரணமானது என நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதும் அன்று. மாறாக அது தீமையானது, இறைத்திருவுளத்திற்கு எதிரானது. பழைய ஏற்பாட்டிலே இறைவன் ஏழை கள் மீது தனிப்பட்ட அன்பும் அக்கறையும் கொண்ட வராக இருக்கின்றார். அவர்கள் சார்பாக நின்று நீதி கிடைக்கச் செய்கின்றார். இதனால்தான் ஏழைகளை மதித்து, அவர்களை காப்பது இறைவனின் பிரதிநிதியாக இருக்கும் நீதித்தலைவர்கள், அரசர்கள் ஆகியோரின் பிரதானமான கடமையாக இருக்கின்றது. (நீதி. 29:14, 31:8-9).

மேலுமாக பழைய ஏற்பாட்டிலே நாம் காண்கின்றோம் "அனாவிம்" என்னும் வர்க்கத்தினரிடம், செல்வமோ, செல்வாக்கோ இல்லை. இவர்கள் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். குறிப்பாக செல்வர் இவர்களை ஒதுக்கி வைத்தனர். இதனால் இவர்கள் கடவுளை முழுமையாக நம்பி இருந்தனர். இவர்களைப்பற்றி (தி.ப. 68:10) இலே "கடவுளே நீர் நல்லவர் எனவே ஒடுக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளித்தீர்" என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறாக இறைவன் ஏழைகள் சார்பாக செயற்பட்டார் என்பதை அறிய முடிகின்றது.

### புதிய ஏற்பாட்டில் ஏழைகள்

இயேசு தன்னுடைய பணியினைத் தொடங்கும்போது "ஆண்டவரின் ஆவி என் மேலே, எளியோருக்கு நற்செய்தி சொல்லவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்" என்பதே அவரது பணியின் நோக்கமாக இருந்தது. (லூக். 4:18-19) அதற்கேற்ப ஏழைகளே நீங்கள் பெறுபெற்றோர் என தன் மலைப்பொழிவில் முழங்குகின்றார். (லூக். 6:20)

ஏழைகளுக்கு இயேசு கொணர்ந்த நற்செய்தி என்ன? அவர்களைப் பேறுபெற்றோர் என அழைக்க காரணம் என்ன? இதற்குரிய பதில்களை அவரே கூறுவதைக் காணலாம். அதாவது "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள் ஏனெனில் கடவுளின் அரசு உங்களுக்குரியதே' (லூக். 6:20) என்பதாகும்.



இறைவனின் அரசாட்சி, அதாவது அவரது ஆற்றல்மிகு உடனிருப்பு எட்டாத உயரத்திலோ எங்கோ வானத்திலோ இருப்பது அன்று. மாறாக இறைவன் இருப்பது மக்கள் நடுவே. 'கடவுளின் அரசு இதோ! உங்களிடையே உள்ளது' (லூக். 17:21). ஏனெனில் ஏழைகளுடன் அவர் தம்மை ஒன்றுபடுத்திக்கொண்டார். (மத். 25:31-45). ஏழைகளின் குமுறல்கள் இறைவனின் குரலே. அவர்களது வேதனையும், விரக்தியும் அவரது பாடுகளே. அவர்களின் முயற்சியும், எழுச்சியும் இறைவனின் போராட்டமே. இதனால்தான் இயேசு ஏழைகளைப் பேறுபெற்றவர்கள் என்று கூறுகின்றார்.

இறைவனுடன் ஒன்றிணையும் பேற்றினை பணக்காரர் பெற வேண்டுமென்றால் அவர்கள் ஏழைகளுடன் சகோதரர்களாக ஒன்றுபட வேண்டும். பணக்காரர் இறைவன்பால் மனம் திரும்புவது என்பது அவர்கள் ஏழைகள் பக்கம் மனம் திரும்புவதே. ஏழைகளுடன் இணைகின்ற செயற்பாடு என்பது அவர்களுடன் தங்கள் செல்வத்தை பகிர்ந்து கொள்வதே. இறையரசை ஏற்று இயேசுவைப் பின்செல்பவர்கள் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடுத்திட வேண்டும் (மாற். 10:21). இவ்வாறு இயேசு போதித்ததால் அவர் வறுமையை வாழ்த்துகின்றார் எனப்பொருள் அன்று. ஏனெனில் வறுமை தன்னிலே எந்த வகையிலும் போற்றத்தக்கது ஆகாது. ஆனால் இறையரசுக்காக அதாவது ஏழைகளுடன் பகிர்வதன் காரணமாக ஏற்படும் ஏழ்மை போற்றத்தக்கது. இத்தகைய ஏழ்மையையே இயேசுவும் ஏற்றுக்கொண்டார். அவர் செல்வமிக்கவராய் இருந்தும் அவருடைய ஏழ்மையால் நீங்கள் செல்வராகும்படி உங்களுக்காக ஏழையானார். (2கொரி. 8:9)




இயேசுவின் பார்வையில் வறுமை தீமையானது என்றால் செல்வம் பாவமானது. ஏனெனில் அதிக செல்வம் என்பது ஆக்கிரமிப்பின் விளைவு. இதனை இயேசு "அந்த செல்வம்" (லூக். 16:11) எனக் குறிப்பிடுகின்றார். வறுமையில் வாடுவோர் இருக்க யாரும் செல்வராய் இருக்க முடியாது. பகிரப்படாத செல்வம் பாவமானது. இதைத்தான் பணக்கார இளைஞன் நிகழ்ச்சியின் ஊடாக தெளிவுபடுத்துகின்றார் இயேசு (மாற். 10:17-22). 'கடவுளுக்கும் செல்வத்துக்கும் நீங்கள் ஊழியம்

செய்ய முடியாது' (மத். 6:24) இதுவே மற்றவர்களை அடக்கி ஆள காரணமாகின்றது. தூய பவுல் கூறுவதைப்போன்று பண ஆசை தான் எல்லாத் தீமைகளுக்கும் வேர். (1திமொ. 6:10) ஏழைகளைக் கண்டு கொள்ளத் தவறுவது இறைவனை கண்டுகொள்ளத் தவறுவதாகும். இதைத்தான் ஏழையும் லாசரும் உவமை ஊடாக இயேசு எடுத்துக் கூறுகின்றார். (லூக். 16:19-31) இவ்வாறாக இயேசு போதித்தது மட்டுமல்லாமல் தன்னுடைய வாழ்வாலும் வாழ்ந்து காட்டினார். (லூக். 8:31).

**எமது திருத்தந்தை பிரான்சிஸின் பார்வையில்...**

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தமது தலைமைப் பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து அவருடைய அறிவுறுத்தல்களும், வழிகாட்டல்களும் திருச்சபையில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருவதைக் காண முடிகின்றது. இவரது முதலாவது சுற்றுமடலாகிய "நம்பிக்கையின் ஒளி" எனும் மடலில் கிறிஸ்தவப் போதனையின் சில அடித்தளங்களைக் காட்டுகின்றார். கடவுளை நம்புதல் மனித வாழ்விற்கு ஒளியாக உள்ளது. இயற்கையின் துணையோடு மனிதர் கடவுள் நம்பிக்கையைக் கண்டு அடையலாம் என்றாலும், கடவுளை நம்பி ஏற்பதற்கு ஓர் இறையொளி தேவையாகின்றது. இதுவே நம்பிக்கை என்னும் நற்பண்பு, கடவுளின் கொடை. நம்பிக்கை என்பது மனிதனின் பகுத்தறி விற்கு அப்பாற்பட்டது. என்றாலும் அது பகுத்தறிவிற்கு எதிரானதல்ல. மாறாக மனிதரின் பகுத்தறிவு வெளிப்படுத்துகின்ற விழுமியங்கள் நம்பிக்கையால் உறுதிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக நம்பிக்கை என்பது திருச்சபையிலே என்றும் அணையாத விளக்காக ஒளிர வேண்டுமென வலியுறுத்துகின்றோம். இதுவே மனிதரிடையே நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுகளை அகற்றி, எல்லோரும் அன்பிலும், அமைதியிலும் வாழ்வதற்குரிய உந்துதலைத் தருகின்றது.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பார்வையில் திருச்சபை தன்னை வெறுமையாக்கி ஏழ்மையின் திருச்சபையாக மலர வேண்டுமென தனது கருத்தை வெளிப்படுத்துகின்றார். இதனை நாம் அவர் திருத்தந்தையாக பொறுப்பேற்ற நாளில் இருந்து ஏழைகள் மட்டில் தனிக் கரிசனை காட்டுவதிலும், உரோமை நகருக்கு வெளியே அதிகாரப் பூர்வமாக பயணம்

சென்றதிலும், ஏழைகளுக்குத் தம் ஆதரவைத் தெரிவித்து ஆறுதல் வழங்கியதிலும் இருந்து அறிந்து கொள்ளலாம். குறிப்பாக இத்தாலி நாட்டின் ஒரு பிரதேசமான சிசிலித்தீவில் அக்ரிஜெந்தோ மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தீவின் பெயர் "லாம் பெதூசா" ஆபிரிக்க அகதிகள், லிபியா, துனீசியா போன்ற நாடுகளில் இருந்து ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொண்டு லாபெதூசா வந்தடைகின்றனர். இவ்வாறு வருகின்றவர்கள் பலர் விபத்துக்களில் சிக்கி கடலில் உயிரிழக்கின்றனர். இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் துன்பநிலையை நேரடியாக சென்று பார்த்து, அவர்களுடன் உரையாடி கடலில் உயிரிழந்தோருக்காக இறைவேண்டல் செய்தார். அகதிகளாக, ஏதிலிகளாக வாழும் மக்களின் துன்பநிலையில் அவர் பங்கேற்ற செயலானது பல செய்திகளை எமக்கு தந்து நிற்கின்றன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பார்வையில் கிறிஸ்து இயலை மையப்படுத்தியதாக திருச்சபையின் தோற்றம் அமைந்தாலும், இறைத்தந்தை யாலும், இறை ஆவியாலும், வழிநடத்தப்பட்ட மீட்பின் திட்டத்தில் தொடர்ச்சியாக திருச்சபையை நோக்குவதே ஒரு முழுமையான பார்வை என விளக்குகின்றார்.



கிறிஸ்து இயலின் அடித்தளத்தில் ஏழ்மை நிறைந்த திருச்சபையாக மலர்வதற்கு வறுமையிலும், துன்பத்திலும் மீட்புப்பணியை நிறைவேற்றிய கிறிஸ்துவின் பாதையில் பயணிக்க திருச்சபை அழைப்புப் பெற்றுள்ளது. கடவுளின் வடிவில் விளங்கிய இயேசுக் கிறிஸ்து தம்மை வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். (பிலி. 2:6-7). திருச்சபையும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை ஆற்ற திருச்சபைக்கு மனித வளங்கள் தேவைப்பட்ட போதிலும் மண்ணுலக மாட்சியை அமைப்புக்களினூடாக தேட அழைப்புப் பெறவில்லை. மாறாக மனத்தாழ்மையையும், தன்னல மறுப்பையும் தனது முன் மாதிரிகையால் பரப்புவதற்கே நிறுவப்பட்டுள்ளது. ஏழைகளுக்கு நற்செய்தி நவிலவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும் (லூக். 4:18), இழந்து போனதைத்தேடி மீட்கவுமே (லூக். 19:10), தந்தையிடமிருந்து கிறிஸ்து பணிக்காக அனுப்பப்பெற்றார். இதையே திருத்தந்தை பிரான்சிசும் திருச்சபையின் வெறுமையைப் பற்றி அடிக்கடி கூறுகின்றார்.

மேலும் திருச்சபையானது வெளியரங்க செயற்பாடுகளிலும் எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்துகிறார். இதற்கு அண்மையில் ஜேர்மன் ஆயர் திருச்சபைக்கு இடறல் ஏற்படக்கூடிய விதத்தில் ஆடம்பரமாக இல்லத்தை அமைக்க விரும்பியதை அறிந்த திருத்தந்தை அவர்கள் அவரை பணிநீக்கம் செய்ததில் இருந்து அறியமுடிகிறது. திருச்சபையின் வாழ்வும் பணியும் வெறுமையில் தொடங்குகின்றபோது கிறிஸ்துவைப்போல் உலகத்தை கிறிஸ்துவின் ஒளியில் வழிநடத்திச் செல்வது சாத்தியமாக முடியும்.

திருத்தந்தையின் சிந்தனைகளை மேலுமாக நோக்குகின்ற வேளையில் ஒவ்வொருவரும் தமது சமய அடிப்படையில் ஏழை, எளியோரை அன்பு செய்ய வேண்டும். உலக நாடுகளில் நீதியும், நேர்மையும் கொண்ட ஆட்சி அமைப்பு உருவாக அனைவரும் உழைக்க வேண்டும். பங்குச் சந்தையில் இரு புள்ளி குறைந்து விட்டது என்றதுமே அது கவனிக்க வேண்டிய செயல் என்றால் முதியோர் ஒருவர் தங்க வீடின்றி குளிரில் நடுங்கி இறந்தால் அது கவனிக்க வேண்டிய செயல் ஆகாதா? என்று தனது புதுவித சிந்தனையைத் தருகின்றார். உலகம் எங்கும் பரவியிருக்கின்ற திருச்சபையானது கிறிஸ்துவின் நற்செய்தியை இன்றும் அதிக ஊக்கத்தோடு தொடர்ந்து அறிவிக்க வேண்டும். நற்செய்தி என்பது மகிழ்ச்சி கொணர்கின்ற செய்தி மட்டுமல்ல. அதை அறிவிப்போரும் மகிழ்ச்சியால் நிரம்பியிருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றார். மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி கொணர்கின்ற செய்தியானது மனிதர்களைத் துன்பத்தில் இருந்தும், சோகத்தில் இருந்தும் விடுவிக்கின்ற செய்தியாக மாற வேண்டுமென விரும்புகின்றார்.

**முடிவாக...**

இவ்வாறாக திருச்சபையானது தன்னை வெறுமை நிலைக்கு உருமாற்று கின்றபோது ஏழையின் திருச்சபையாக, சமூக அநீதியான அமைப்புக்களுக்கு எதிராக உண்மைத் தன்மையோடு அறைகூவல் விடுக்கின்ற திருச்சபையாக மாற்றம் பெற முடியும். இது திருச்சபையின் இயல்பின் இலக்கான நற்செய்தி அறிவிப்புப்பணிக்கு வலுவூட்டுமென்பதே திருத்தந்தையின் நம்பிக்கையாக இருக்கின்றது. இன்றைய பின் நவீனத்துவத்தின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவூட்டலை தன்னை வெறுமையாக்கி வாழ்வதன் மூலம் தான் முடியும் என்பதே திருத்தந்தையின் அசைக்கமுடியாத கனவாகவும் நனவாகவும் இருக்கின்றது.

# சீடத்துவ வாழ்வின் பண்புகள்.

# பார்வையற்ற பர்த்திமேயு குணம் பெறல்

## (மாற்கு 10 : 46 - 52)

அருட்பணி. P. தயாபரன்
விரிவுரையாளர்,
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

## முன்னுரை



ஒவ்வொரு இலட்சியத் தலைவனும் தன்னைப் பின்பற்றி தன் இலட்சியத்தைத் தொடர்ந்து செய்ய சீடர்களை ஏற்படுத்துவர். சீடன் என்பவன் தன் தலைவனின் சிந்தனைகளை, கொள்கைகளை, வாழ்க்கை முறைகளை, இலட்சியங்களை தனதாக்கி அவர்மீது நம்பிக்கை கொண்டு அவர் வழியில் செல்பவன். இயேசு தம் பணிவாழ்வின்போது தமக்கென சீடர்களை அழைத்தார். (மாற். 1:16-20; 2:13-14). அவர்கள் தம்மோடு இருக்கவும் தம்மைப் பின்பற்றி தம் பணியைத் தொடர்ந்தாற்றவும் அழைத்தார். (மாற்.3:14). எனவே இயேசுவின் சீடர்கள் என்பவர்கள் இயேசுவின் அழைப்பிற்கு விருப்புடன் பதில்கூறி இயேசுவை அறிந்து, அவரில் நம்பிக்கைகொண்டு, அவரது வார்த்தைகளைப் பின்பற்றி அவர் வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்ந்து, அவரது இறையரசு பணியை தொடர்ந்து செய்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

இயேசுவின் சீடத்துவ வாழ்விற்கு அழைக்கப்பட்டு சீடர்களாக வாழ்பவர்களின் வாழ்வில் இன்று பல தடுமாற்றங்களை, சவால்களை காண்கின்றோம். இதனால் பலர் சோர்ந்து சீடத்துவ வாழ்வை புறக்கணிக்கின்றனர். இயேசுவால் நேரடியாக அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் கூட பல சந்தர்பங்களில் சீடத்துவ வாழ்வை புரிந்துகொள்ளாது, தடம்புரள்வதை நற்செய்திகளில் காண்கின்றோம்.

குறிப்பாக மாற்கு நற்செய்தியில் பல இடங்களில் காண்கின்றோம். இவ்வாறு அழைக்கப்பட்ட சீடர்கள் இயேசுவை சரியாக புரிந்து கொள்ளாது அவரது சீடத்துவ வாழ்வையும் புரிந்துகொள்ளாது தடுமாறுகின்ற நிலையில், பார்வையற்ற பர்த்திமேயு குணம் பெற்று இயேசுவை பின்சென்ற நிகழ்வினூடாக மாற்கு நற்செய்தியாளர் சீடத்துவ வாழ்வின் அடிப்படையான பண்புகளை வலியுறுத்தி எம்மை சீடத்துவ வாழ்விற்கு அழைத்து நிற்கின்றார். எனவே இக்கட்டுரையில் பார்வையற்ற பர்த்திமேயு குணமடைந்து இயேசுவை பின்சென்ற நிகழ்வினை (மாற். 10:46-52) ஆழமாக புரிந்து அதனூடாக சீடத்துவ வாழ்வின் முதன்மையான பண்புகளை கண்டுகொள்வோம்.

## பர்த்திமேயு பார்வைபெற்ற நிகழ்வின் கதைப்பின்னணி (மாற். 10:46-52)

மாற்கு நற்செய்தியில் இயேசு தமது கலிலேயாப் பணியைத் தொடர்ந்து எருசலேமை நோக்கி சீடர்களுடன் பயணிக்கின்றார். எருசலேம் நோக்கிய இப்பயணத்தின்போது (8:31-10:52) இயேசு மூன்று தடவைகள் எருசலேமில் நடைபெறவுள்ள தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றி தம் சீடர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். (8:31; 9:31; 10:32). ஆனால் அவர்கள் அதனை புரிந்துகொள்ளாமல் அதனைத் தடுப்பதையும், தவறாகப் புரிவதையும் காண்கின்றோம். (8:32; 9:32; 10:35 - 40). இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு தடவையும் இயேசு சீடர்களுக்கு சீடத்துவ வாழ்வை சரியாகப் புரிந்துகொள்ள அறிவுரை கூறி தெளிவுபடுத்துவதையும் காண்கின்றோம். அந்த வகையில் பார்வையற்ற பர்த்திமேயு பார்வைபெற்று இயேசுவை பின்பற்றிய நிகழ்வானது (10:46-52) இயேசு மூன்றாம் முறையாக தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றி அறிவித்த பின்னர் (10:32-34) அதனை சீடர்கள் புரிந்துகொள்ளாமல் செபதேயுவின் மக்கள் யாக்கோப்பும் யோவானும் முதன்மையான இடத்தை கேட்பதையும் ஏனைய சீடர்கள் அவர்களுடன் முரண்படுகின்ற நிகழ்வையும் (10:35-45) தொடர்ந்து அமைந்துள்ளது.

## 1. இயேசு யார் என்பதை கண்டுகொள்ளுதல்

இயேசுவால் அழைக்கப்பட்ட சீடர்கள் அவருடைய வார்த்தைகளை கேட்டு, அவருடைய செயல்களை கண்டு, அவர் பின்னே சென்ற போதும் அவர் யார் என்பதை, அவரது பணி என்ன என்பதை முழுமையாக அறிய கண்டுகொள்ள

தவறிவிடுகின்றார்கள். இதனை மாற்கு நற்செய்தியில் பல இடங்களில் காண்கின்றோம். இயேசு காற்றையும் கடலையும் அடக்கிய நிகழ்வில் சீடர்களைப் பார்த்து "ஏன் அஞ்சுகின்றீர்கள்? உங்களுக்கு என்னும் நம்பிக்கை இல்லையா?" (4:35-41) எனக் கேட்கின்றார். பரிசேயர், ஏரோதியரின் புளிப்பு மாவு பற்றி இயேசு சீடர்களிடம் பேசியபோது அவர்களது அறியாமையை கண்டு "இன்னுமா உணராமலும், புரிந்து கொள்ளாமலும் இருக்குறீர்கள்? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் நீங்கள் காண்பதில்லையா? காதிருந்தும் கேட்பதில்லையா?" (8:14-21) என வினவுகிறார். மேலும் இயேசு, தம் எருசலேம் நோக்கிய பயணத்தில் தம் பாடுகள், மரணம், உயிர்ப்பு பற்றி சீடர்களுக்கு மூன்று முறை கூறிய போதும் மூன்று முறையும் சீடர்கள் இயேசு யார், அவரது பணி என்ன என்பதை புரிந்து கொள்ளாது தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ற செயல்களை நாடுவதையும், இயேசுவால் கடிந்துகொள்ளப்படுவதையும் பார்க்கின்றோம் (8:32-10:52). மேலும் இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ் ஸ்கரியோத்து இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்றான் (14:10-11). பேதுரு இயேசுவை தமக்கு தெரியாது என்று மறுதலிக்கின்றார் (14:50-52)

இவ்வாறு சீடர்களும் மக்களும் இயேசுவின் பின்னால் வீதி வழியே இயேசுவோடு சென்றாலும், இயேசு யார் என்பதை கண்டு கொள்ளவில்லை. ஆனால் வீதியோரமாக அமர்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்த பர்த்திமேயு இயேசு யார் என்பதை இனங்கண்டு, "இயேசுவே தாவீதின் குமாரனே" என ஒருமுறையல்ல இருமுறை கத்துகின்றான். மாற்கு நற்செய்தியில் இயேசு தாவீதின் குமாரன் எனக் குறிப்பிடப்படுவது இதுவே முதல் தடவை. யூதரின் மரபுப்படி, எதிர்பார்க்கப்பட்ட மெசியா தாவீதின் பரம்பரையில் வரும் தாவீதின் மகன் (2 சாமு. 7:12; தி.பா.89:3; 17:21). இயேசு எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்பதை கண்டு கொண்டவனாக 'தாவீதின் மகனே' என பர்த்திமேயு கத்துகின்றான். எனவே இயேசுவின் சீடர்களாக அவர் பின்னே செல்பவர்கள் முதலில் அவர் யார் என்பதை, அவரது பணி என்ன என்பதை கண்டு கொள்ள வேண்டும்.

## 2. நம்பிக்கையை வெளிப்படுத்துதல்

இயேசு யார் என்பதை அடையாளம் கண்டுகொண்ட பர்த்திமேயு "இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்" எனக் கத்தி தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினான். பேசாது இருக்கும் படி பலர் அதட்டிய போதும் அவன் இன்னும் உரக்கக்கத்தி தன் நம்பிக்கையை வெளிப்படுத்தினான். அவனது நம்பிக்கையை கண்ணுற்ற இயேசு அவனை அழைத்து வர பணித்தார். இயேசு

தன்னை அழைக்கின்றார் என அறிந்ததும் தன் பாதுகாப்பிற்காக அவன் வைத்திருந்த ஒரே ஒரு பொருளாகிய மேலாடையை அவன் எறிந்து விடுகிறான். இயேசுவிடம் செல்வதால் அவர் நிச்சயம் பார்வை தருவார் என்ற உறுதியான நம்பிக்கை மேலுடையை எறிவதனூடாகவும் குதித்தெழுந்து செல்வதனூடாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

மாற்கு நற்செய்தியில், இயேசுவின் மீது நம்பிக்கையை வெளிப்படுத்திய வர்கள் குணம் பெறுவதை பல இடங்களில் காண்கின்றோம். உதாரணமாக இயேசு முடக்குவாதமுற்றவனை சுமந்து வந்தவர்களின் நம்பிக்கையை கண்டு அவனை குணப்படுத்தினார் (2:1-12). பன்னிரண்டு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண்ணின் நம்பிக்கையை பார்த்து "மகளே உனது நம்பிக்கை உன்னை குணமாக்கிற்கு அமைதியுடன் போ" (5:25-34) எனக்கூறி குணப்படுத்தினார். தீய ஆவி பிடித்திருந்த சிறுவனுடைய தந்தையின் நம்பிக் கையை கண்ணுற்று அவனைக் குணப்படுத்தினார் (9:14-21).

இயேசுவால் அழைக்கப்பட்ட சீடர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் பின்னால் சென்ற போதும் (1:14-20; 2:13-14), சில சந்தர்ப்பங்களில் அவர்களது நம்பிக்கை தளர்வடைவதையும், இயேசு அவர்களது நம்பிக்கையின் மையை கடிந்து கொள்வதையும் காண்கின்றோம். உதாரணமாக இயேசு காற்றையும் கடலையும் அடங்கியபோது "ஏன் அஞ்சுகிறீர்கள்? உங்களுக்கு இன்னும் நம்பிக்கையில்லையா?" (4:35-41) எனச் சாடுகின்றார். சீடர்கள் தீய ஆவி பிடித்த சிறுவனை குணப்படுத்த முடியாமல் இருந்ததைக் கண்ட இயேசு "நம்பிக்கையற்ற தலைமுறையினரே" எனச் சீடர்களின் நம்பிக்கைக் குறைவை சுட்டிக் காட்டுகின்றார் (9:19).

எனவே இயேசுவின் பின்னால் செல்ல விரும்பும் சீடன் இயேசுவுக்காக எல்லாவற்றையும் துறந்து (2:14; 8:34; 9:33-37; 10:21-31) இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை எத் தடைகள், பயங்கள் வந்தாலும் அவற்றைத் தாண்டி நம்பிக்கையை வெளிப்படுத்த வேண்டும்.

## 3. முதன்மையான இடத்தை விரும்புவதை தவிர்த்தல்

தனது நம்பிக்கையை வெளிப்படுத்தி இயேசுவிடம் வந்த பர்த்திமேயுவிடம் இயேசு "உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்" என வினவுகின்றார். அதற்கு பர்த்திமேயு "நான் மீண்டும் பார்வை பெற வேண்டும்" என்கின்றான். பர்த்திமேயு தன் வாழ்வில் எதை இழந்தானோ அதனையே கேட்கின்றான். தன் நாளாந்த வாழ்வுக்கு தேவையான அடிப்படையான பார்வையே கேட்கின்றான். ஆனால் என் பின்னே வாருங்கள் என இயேசு அழைத்த போது

தன் தந்தையையும் தம் படகையையும் விட்டுவிட்டு பின்சென்ற யாக்கோபிடமும், யோவானிடமும் (2:19-20) இயேசு இதே கேள்வியை சற்று முன்னர் கேட்டபோது (10:36) அவர்கள் "நீர் அரியணையில் இருக்கும் போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும், இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்" (10:37) எனப் பதிலளித்து முதன்மையான இடத்தை எதிர்பார்த்தனர். இன்னும் இதைக் கேட்ட ஏனைய சீடர்கள் அவர்கள் மீது கோபம் கொள்கின்றனர். ஏனெனில் இதற்கு முன்னர் தான் அவர்கள் வழியில் யார் பெரியவர்? என தமக்குள் வாதாடி முதன்மையான இடங்களை எதிர்பார்த்தனர் (9:33).

இந்நிலையில் இயேசு பெரியவராக, முதல்வராக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் தொண்டராக, பணியாளராக இருக்க வேண்டும். பணிவிடை பெறுவதல்ல, பணிவிடை புரிகிறவராக இருக்க வேண்டும் எனக் கூறி சீடத்துவ வாழ்வின் தாழ்ச்சியை, பணிவை, தியாகத்தை தெளிவுபடுத்துகின்றார் (9:35; 10:44-45).

எனவே சீடன் என்பவன் முதன்மையான இடங்களை, பதவிகளை, அதிகாரங்களை எதிர்பார்க்கின்ற, அதை நோக்கி பயணிக்கின்றவனாக இருக்க கூடாது. மாறாக தன்னை மறுத்து பிறருக்கு தொண்டாற்றுகின்றவராக, பணியாற்றுகின்றவராக இருக்க வேண்டும். பிறருக்காக வாழ்பவராக இருக்க வேண்டும்.

## 4. இயேசுவை பின்பற்றி வழிநடத்தல்

பார்வை கேட்ட பர்த்திமேயுவிடம் இயேசு "நீர் போகலாம், உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்கின்றார். உடனே அவன் பார்வை பெற்று அவரைப் பின்பற்றி அவருடன் வழிநடந்தான். மாற்கு நற்செய்தியில் உடல் நலம் பெற இயேசுவிடம் வந்தவர்களை இயேசு குணமாக்கி வழியனுப்புகின்றார். அவர்கள் எல்லோரும் சென்றுவிடுகின்றனர். முடக்குவாதமுற்றவனிடம் இயேசு "உன் படுக்கையை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு போ" என்றார். அவனும் சென்றாள். (2:1-12). இரத்தப்போக்கினால் வருந்திய பெண்ணை குணமாக்கி அமையுடன் போ' எனக் கூறுகின்றார், அவளும் செல்கின்றாள். (5:25-34). பெத்சாய்தாவில் இயேசு பார்வையற்ற ஒருவனைக் குணமாக்கி வீட்டுக்கு அனுப்பிவிடுகின்றார். (8:25-26). ஆனால் நீர் போகலாம் எனக்கூறி பர்த்திமேயுவை இயேசு அனுப்பியபோது அவன் அவரைப் பின்பற்றி அவருடன் வழிநடக்கின்றான். பர்த்திமேயு தனக்கு பார்வையைத் தந்து ஒளிகொடுத்த இயேசுவை விட்டுவிட்டு

தன் வழியே செல்லவில்லை. மாறாக அவரைப் பின்தொடர்கின்றான். அவர் வழிநடக்கின்றான். இயேசு தம் பாடுகள், மரணம், உயிர்ப்பை சந்திக்க செல்கின்ற எருசலேம் நோக்கிய பயணத்தில் அவருடன் வழிநடக்கின்றான்.

இயேசுவின் சீடன் என்பவர் அவரிடமிருந்து நன்மைத்தனங்களை பெற்றுவிட்டு ஓடிப் போகிறவன் அல்ல. மாறாக இயேசுவோடு சேர்த்து உடன் பயணிப்பவன். இயேசு தம்மோடு இருக்கவே சீடர்களை அழைத்தார் (2:14). இயேசுவுடன் இருப்பது, அவருடன் பயணிப்பது, ஒரு தற்காலிகமானதொன்றல்ல, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் உரியதல்ல. மாறாக அது ஒரு நிரந்தரமானது. அது ஒரு தொடர்ச்சியான செயல். எனவே இயேசுவின் சீடன் அவருடன் எப்போதும் இருந்து, அவர் பின் சென்று கல்வாரி நோக்கி இயேசுவுடன் வழிநடப்பவன்.

## முடிவுரை


இயேசுவால் அழைக்கப்பெற்று அவருடைய போதனைகளை கேட்டு அவரது புதுமைகளைக் கண்டு அவருடன் எருசலேம் நோக்கி வழிநடந்த சீடர்கள், இயேசுவை சரியாக புரிந்து கொள்ளாது தடுமாறுகின்ற நிலையில், பார்வையற்ற பர்த்திமேயு குணமடைந்து இயேசுவைப் பின்பற்றி அவருடன் வழிநடக்கும் நிகழ்வின் ஊடாக, சீடன் என்பவன் இயேசுவை முழுமையாக அறிந்தவனாக அவர் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவனாக அவரையே முதன்மையாக தேடுபவனாக அவரைப் பின்பற்றி வழிநடப்பவனாக இருக்க வேண்டும் என சீடத்துவ வாழ்வின் முக்கியமான பண்புகள் குறிப்பிடப்படுகின்றன.

திருமுழுக்கின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் சீடத்துவ வாழ்வில் நிலைத்திருக்க வேண்டும் என்றால், முதலில் அவன் இயேசு யார் என்பதை தனது தனிப்பட்ட வாழ்வில் கண்டுகொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி வெறுமனே அறிவு ரீதியாக அறிந்து கொள்வதல்ல. மாறாக தனிப்பட்ட வாழ்வில் இயேசுவை உணர்ந்து அனுபவித்தவனாக இருக்க வேண்டும். அடுத்து இவ்வாறு இயேசுவை கண்டுகொண்டவன் தன் வாழ்வில் எத்தகைய தடைகள் வந்தாலும் அதனை உடைத்தெறிந்து அவர்மீது ஆழமான உறுதியான நம்பிக்கை கொண்டு தன் நம்பிக்கையை வாழ்வில் வெளிப் படுத்துபவனாக இருக்க வேண்டும். மேலும் தன் வாழ்வில் முதன்மையான இடத்தையோ பதவிகளையோ தேடாதவனாக தன்னையே மறுத்து பணியாற்றும் பணியாளனாக இயேசுவின் வழியில் அவர் காட்டும் பாதையில் அவரைப் பின்பற்றி அவருடன் பயணிப்பவனாக இருக்க வேண்டும்.

# செபம் பற்றிய லூக்கா நற்செய்தியின் பார்வை

அருட்சகோ. P. தயாளன்
4ம் வருட இறையியல்

## முன்னுரை



செபம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் அடிநாதமாக இருந்தது, இருக்கின்றது, என்றென்றும் இருக்கும். செபம் என்பது மனிதனின் வாழ்வில் நிறைந்து இருக்கவேண்டிய ஒன்று. இயேசு தனது வாழ்வில் அதிகமான நேரத்தை செபிப்பதிலும் செபத்தைப் பற்றி மற்றவர்களுக்கு படிப்பிப்பதிலும் செலவிட்டார்.


செபம் என்றால் என்ன? என்பதை புதிய ஏற்பாட்டு அடிப்படையில் பார்க்கும் போது செபம் என்பது "எம்முடைய சிந்தனைகளை, இதயங்களை இறைவன்பால் எழுப்புவது", "உண்மையிலும் ஆவியிலும் இறைவனை தொழுவது", "கடவுளுடன் உரையாடுவது" என பல்வேறு வரைவிலக்கணங்கள் இருக்கின்றன. இயேசு இறைமகனாக இருந்தபோதும் செபித்தார். முற்றுமுழுதாக இறைவனில் தங்கி வாழ்ந்தார். இறைவனின் விருப்பத்தை தனது வாழ்விலே செய்து முடிக்க முயன்றார். இயேசு முழுமையான மனிதனாக தந்தையிடம் வேண்டினார்.

## இயேசுவும் செபமும்

இயேசுவின் செபம் பற்றி ஆராயும் போது அது கடவுளோடு இயேசு கொண்டுள்ள தனிப்பட்ட உறவையும் உரையாடலையும் பற்றிக் கூறுகின்றது. இயேசு தன்னுடைய தந்தையின் சித்தத்திற்கு தன்னை முற்றுமுழுவதும் அர்ப்பணித்து வாழ்ந்தார். தன் மேல் தன் தந்தைக்கு உள்ள திட்டத்தை அறிய முற்றுமுழுதாக தந்தையில் தங்கி வாழ்ந்தார். இயேசு தனது வாழ்வில் இடம்பெற்ற முக்கியமான எல்லாச் நிகழ்வுகளின் முன்பும் செபித்ததை காணக்கூடியதாக உள்ளது. எப்பொழுதெல்லாம் அவருக்கு பலம், சக்தி, தந்தையின் உறவு தேவைப்பட்டதோ அப்போதெல்லாம் அவர் செபித்தார். இயேசுவின் தொடர்ச்சியான இச்செபங்கள்

அவருக்கும் தந்தைக்கும் உள்ள உறவை வலுப்படுத்தின. இதனால்தான் இயேசு 'நானும் தந்தையும் ஒன்றே' என கூறுகின்றார். (யோவா 10:30)

### லூக்கா நற்செய்தியில் செபத்தின் முக்கியத்துவம்



நான்கு நற்செய்திகளும் இயேசு செபத்தில் ஈடுபட்டார் என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ள போதும் எல்லா நற்செய்தியாளர்களையும் விட லூக்கா நற்செய்தியாளர் செபம் பற்றிய அதிக குறிப்புக்களை தந்துள்ளார். மத்தேயு நற்செய்தி இயேசுவின் அரசாட்சியைப் பற்றியும், மாற்கு நற்செய்தி இயேசு இறைபணியாளர் என்பதையும் முக்கியப்படுத்திய அதேவேளை லூக்கா நற்செய்தி இயேசுவின் செபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவரது மானிடத்துவத்தை சுட்டிக்காட்ட முயன்றுள்ளது. இதனால்தான் விவிலிய அறிஞர் "சொற்பாவனையிலும் இட அமைவிலும் செபமானது லூக்கா நற்செய்தியில் முக்கிய ஒரு கருவாக அமைகின்றது" என்கின்றனர்.

லூக்கா நற்செய்தியாளர் செபத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்ற ஒருவர் என பேசுகின்றபோது அவருடைய நற்செய்தியின் ஆரம்பம் மற்றும் முடிவுப் பகுதிகளை சற்று கண்ணோக்குவது சுவாரஸ்யமானது. இவர் தனது நற்செய்தியை செபச் சூழ்நிலையில் ஆரம்பித்து செபச் சூழ்நிலையில் முடிவுசெய்கின்றார். அதாவது சக்கரியா இறைவனுக்கு கோவிலில் பலிசெலுத்துவதில் (1:10) ஆரம்பித்து சீடர்கள் கோவிலில் எப்போதும் கடவுளை போற்றியவாறு இருந்தார்கள் (24:53) என தனது நற்செய்தியை நிறைவு செய்கின்றார். மேலுமாக நாளாந்தம் திருப்புகழ்மாலையில் பயன்படுத்தும் மரியாவின் பாடல், சக்கரியாவின் பாடல் என்பனவும் இன்று திருப்பலியில் பயன்படுத்தும் உன்னதங்களிலே எனும் செபமும் லூக்கா நற்செய்தியில் இருந்தே எடுக்கப்பட்டன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

லூக்கா நற்செய்தியில் 'செபம்' என்று நோக்கும் போது இதனை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1) இயேசு தனது வாழ்வில் செபித்த சந்தர்ப்பங்கள்
2) இயேசு செபத்தைப்பற்றி தம் சீடர்களுக்கு விளக்கமளித்த நிகழ்வுகள்
3) ஏனையவர்கள் செபங்களில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள்

**1) இயேசு தனது வாழ்வில் செபித்த சந்தர்ப்பங்கள்**

யூதர்கள் செபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார்கள். செபமும் வாழ்வும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த ஒரு கலாச்சாரத்தை கொண்டிருந்தார்கள். இயேசுவின் காலத்தில் பொதுவாக யூதர்கள் மூன்று மணித்தியாலம் செபத்தில் ஈடுபட்டதாக கின்காட் எனும் விவிலிய அறிஞர் குறிப்பிடுகின்றார். இயேசுவும் அவ்வாறான ஒரு சமூகத்தில் இருந்து வளர்க்கப்பட்டதால் சிறு வயதில் இருந்தே செபத்திற்கும் வழிபாடுகளுக்கும் பயிற்றப்பட்டு வாழ்ந்தார் (2:41-52, 4:16). இதனால் வாழ்நாளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் செபத்தில் ஈடுபட்டார். லூக்கா மிகமுக்கியமான எட்டு சந்தர்பங்களில் இயேசு செபித்ததை குறிப்பிட்டுள்ள போதும் இயேசு வெறுமனே எட்டு தடவைகள்தான் செபித்தார் என்று பொருள்கொள்ள முடியாது. அவர் பல தடவைகள் செபித்தார் (கருக்கலில் எழுந்து செபித்தார், இரவு முழுவதும் செபித்தார், தனிமையில் செபித்தார்) என பல விவிலிய ஆதாரங்கள் உள்ளன. ஆனால் முக்கியமான எட்டு தருணங்களில் செபித்ததையே லூக்கா தமது நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் ஒலிவ மலையில் இயேசு செபித்ததை தவிர மற்ற அனைத்து செபம் பற்றிய குறிப்புகளும் லூக்கா நற்செய்தியாளருக்கு மட்டுமே பிரத்தியேகமானவை.

## 1.1. இயேசுவின் திருமுழுக்கு (3:21)

இயேசு தனது பகிரங்கப் பணியை ஆரம்பிப்பதற்கு முன் திருமுழுக்குப் பெற்றார். திருமுழுக்கு பெற்றபின் இயேசு செபிக்கும் போது வானம் திறந்து தூய ஆவி அவர் மேல் இறங்கியது. நாம் இங்கு முக்கியமான விடயத்தை கவனிக்க வேண்டும் அதாவது லூக்காவின் நற்செய்திப்படி இயேசுவின் திருமுழுக்கு பெற்று செபிக்கும் போதே தூய ஆவி அவர்மேல் இறங்கினார்.

## 1.2. இயேசுவின் தொடர்ச்சியான செபம் (5:16)

இயேசு தொழுநோயாளியை குணப்படுத்திவிட்டு ஒரு தனிமையான இடத்திற்குச்சென்று செபித்தார் என லூக்கா குறிப்பிட்டுள்ளார். ஒத்தமை நற்செய்தியாளர்கள் தொழுநோய் குணப்படுத்தலை குறிப்பிட்டுள்ள போதும்

லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே இயேசு குணப்படுத்தலின்பின் தனிமையான இடத்திற்குச் சென்று செபித்தார் என குறிப்பிடுகின்றார். ஹரிஸ் எனும் விவிலிய அறிஞர் இயேசு அடிக்கடி தனிமையான இடத்தில் இருந்து தந்தையிடம் உறவு கொள்ள விரும்பினார். அதன் மூலம் தம்மை தந்தையின் சித்தப்படி மீள்நிரப்பிக் கொண்டு மந்தையின் தேவைகளுக்கு ஏற்ப தன்னை வழங்கினார் என குறிப்பிடுகின்றார்.

## 1.3. பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை தேர்ந்தெடுத்தல் (6:12)

இந்த இறைவார்த்தை பகுதியில் இயேசு இரவு முழவதும் செபித்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது. தம்மோடு இறுதிவரைக்கும் இருக்கப்போகின்ற, தாம் இவ்வுலகை பிரிந்த பின்பும் இவ்வுலகில் தம் பணியை பரப்பத் தம் பிரதிநிதியாக இருக்கப் போகின்ற அப்போஸ்தலர்களை தெரிவுசெய்யப் போகும் முக்கியமான ஒரு தருணத்திற்கு முன் இரவு முழுவதும் செபித்தார். இந்த செபம் மலையில் இடம்பெற்றுள்ளது. வேதாகமத்தில மலையானது கடவுளுடைய வெளிப்படுத்தலின் இடமாகவும், இறைவனுக்கு நெருங்கிய இடமாகவும் குறிப்பிடப்படுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## 1.4. பேதுருவின் விசுவாச அறிக்கை (9:18-27)

ஒத்தமை நற்செய்திகள் அனைத்தும் பேதுருவின் விசுவாச அறிக்கையை குறிப்பிட்டுள்ள போதும் லூக்கா மாத்திரமே இயேசு தம் சீடர்களை பார்த்து “நான் யார் என்று மக்கள் கூறுகின்றார்கள்” என கேட்பதற்கு முன் செபித்தார் என குறிப்பிடுகின்றார். இந்த நிகழ்வின் முடிவிலே லூக்கா இறையரசின் மிக நெருங்கிய வருகையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இந்தப் பகுதியைச் செபத்துடன் ஆரம்பித்து இறைவனின் வருகையின் அறிவிப்புடன் நிறைவு செய்கின்றார்.

## 1.5. உருமாற்றம் (9:28-29)

இயேசு பாடுகள் படுவதற்கு ஜெருசலேம் நோக்கிச் செல்வதற்கு சற்று முன்பே இந்நிகழ்வு தரப்படுகின்றது. இந்நிகழ்வு இயேசு மலையில் செபிக்கும்போதே இடம்பெற்றுள்ளது. இங்கு ஒரு முக்கிய விடயம் கவனிக்கப்பட வேண்டியுள்ளது அதாவது இயேசு செபித்துக்கொண்டிருக்கும்போதுதான் அவர் முகம் உருமாறியது. அத்துடன் இந்தச் செபத்தின் போது மட்டுமே இயேசுவின் மூன்று சீடர்கள் (பேதுரு, யோவான், யாகப்பர் ஆகியோர்) இயேசுவுடன் கூட இருந்துள்ளனர். ஏனைய வேளைகளில் இயேசு தனிமையிலேயே செபித்தார்.

சில விவிலிய அறிஞர்களின் கருத்துப்படி தந்தையிடம் நெருக்கமாக உறவு கொள்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுவின் முகம் சூரியனைப்போல் பிரகாசிக்கும் ஆயினும் அதை பார்ப்பதற்கு வேறு யாரும் இருந்ததில்லை. இந்த ஒரு சந்தர்ப்பத்தில்தான் இயேசு சீடர்களை தம்முடன் கூட்டிச்சென்றதால் அவர்கள் இந்நிகழ்வுக்கு சான்று பகர்ந்துள்ளனர் என்கின்றனர்.

## 1.6. பேதுருவுக்காக இயேசுவின் செபம் (22:32)

இந்த இறைவார்த்தைப் பகுதி பேதுரு தம்மை மும்முறை மறுதலிப்பார் என இயேசு முன்னறிவித்து பேதுருவின் நம்பிக்கைக்காக செபித்ததாக குறிப்பிடு கின்றது. இங்கே இயேசு பேதுருவுக்காக அதன் மூலம் ஏனைய சீடர்களுக்காகவும் தம் குருத்துவ செபத்தை செபித்ததை (நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக வேண்டினேன்) லூக்கா குறிப்பிட்டுள்ளார் என சில விவிலிய அறிஞர்கள் கருதுகின்றனர்.

## 1.7. ஒலிவ மலையில் (22:39-46)



இந்தச் செபமானது இயேசு தன்னை முற்று முழுதாக இறைவனுக்கு அர்ப் பணித்து செபித்ததை கூறி நிற்கின்றது: 'தந்தையே என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே ஆகட்டும்'. லூக்காவின் இந்த பகுதியானது 'சோதனைக்கு உட் படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள்' என்று இயேசு சீடர்களுக்கு அறிவிப் பதையே தொடக்கமாகவும் முடிவுமாகவும் கொண்டுள்ளது. இயேசு செபித்ததை லூக்கா ஒருதடவை குறிப்பிட்டுள்ள அதேநேரம் இயேசு மூன்று முறை செபித்ததாக மாற்கு குறிப்பிட்டுள்ளார். (மாற்.14:32-42)

## 1.8. சிலுவையில் (23:46)

எல்லா நற்செய்தியாளர்களும் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை குறிப்பிட்டுள்ளபோதும் லூக்கா நற்செய்தியாளர் மாத்திரமே இயேசு சிலுவையில் தொங்கியபடி செபித்தார் என குறிப்பிடுகின்றார். இதிலே இரண்டு விதமான செபங்கள் உண்டு. முதலாவது தன்னை துன்புறுத்துவோரை மன்னிக்கும்படியான செபம். தாம் துன்புற்றிருந்தபோதும் இயேசுவின் சிந்தனைகள், செபம் எல்லாம் தாம் உலகத்தை மீட்க வந்த நோக்கத்தை பற்றியதாக இருந்ததை

காணக்கூடியதாக உள்ளது. இரண்டாவது நம்பிக்கையின் செபம் அதாவது 'தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்' எனும் செபம் ஆகும். இச்செபமானது சந்தேகத்திலோ, துன்பத்தின் வெளிப்பாட்டிலோ வந்த செபம் அல்ல மாறாக இயேசுவின் பணியின் நிறைவினால் நிலைநாட்டப்பட்ட இறையரசு அமைக்கப்பட்டதன் வெளிப்படுத்தலாகும். இதேமாதிரியான செபம் தி.பா 30:5ல் காணப்படுகின்றது. அதில் 'ஆண்டவர்' என்று திருப்பாடல் ஆசிரியர் யாரை விழித்தாரோ அவரையே இயேசு இங்கு 'தந்தையே' என உரிமையோடும், பாசத்தோடும் விழித்து தம்மைத் தந்தைக்கு முற்றிலும் கையளிக்கின்றார்.

## 2) செபம் பற்றிய இயேசுவின் போதனைகள்

நற்செய்தியாளர் லூக்கா இயேசு செபித்த பல சந்தர்ப்பங்களை குறிப்பிட்டுள்ள துடன் செபம் பற்றிய இயேசுவின் படிப்பினைகளையும் தந்துள்ளார். இயேசுவின் முன்மாதிரிகையான செபவாழ்வு சீடர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. இதனால் இயேசுவைப்போல தாமும் செபிக்க வேண்டும் என்ற ஒரு ஆசை சீடர்களுக்கு எழுந்தது. இதனால்தான் சீடர்கள் இயேசுவைப் பார்த்து 'ஆண்டவரே எங்களுக்குச் செபிக்கச் சொல்லித்தாரும்' என கேட்டார்கள். இயேசுவின் பணியின் வெற்றி வெறுமனே போதனையின் மூலம் அல்லாமல் தமது உண்மையான வாழ்வின் மூலம் மற்றவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தியதாகும். சீடர்களின் செப ஆர்வம் வளர்வதற்கு இயேசுவின் செபவாழ்வு உந்துதலாக இருந்தது என்பதை யாரும் மறுக்க இயலாது. "ஆண்டவரே எங்களுக்கு செபிக்க கற்றுக்கொடும்" (11:1) எனற சீடர்களின் வினாவுக்கு பரலோக மந்திர செபத்தை சொல்லிக்கொடுத்ததும் அல்லாமல் மேலும் மூன்று உவமைகள் ஊடாக செபிப்பவருக்கு இருக்கவேண்டிய மனநிலை பற்றியும் விளக்கம் அளித்துள்ளார். இந்த மூன்று உவமைகளும் லூக்கா நற்செய்தியில் மட்டுமே குறிப்பிடப் பட்டுள்ளன. சிறப்பாக லூக்கா தமது 11ம், 18ம் அதிகாரங்களில் செபம் பற்றிய படிப்பினைகளை தந்து நிற்கின்றார்.

### 2.1. பரலோக மந்திரம் (11:2-4)

யூத ரபி ஒருவர் தம்முடைய சீடர்களுக்கு செபிக்கும் முறையை கற்றுக்கொடுப்பது சாதாரண வழக்கமாக இருந்து வந்துள்ளது. திருமுழுக்கு யோவானும் இவ்வாறு தம் சீடர்களுக்கு கற்றுக்கொடுத்துள்ளார் (11:1) ஆகவே இயேசுவின் சீடர்களும் அவரிடம் தங்களுக்கும் செபிக்கக் கற்றுத் தரும்படி கேட்கின்றனர். பரலோக மந்திரமானது வேதாகமத்தில் இரண்டு நற்செய்திகளில் (லூக்கா, மத்தேயு) மட்டுமே காணப்படுகின்றது. தந்தையை எப்படி அழைக்க வேண்டும், நாம்

எப்படி செபிக்க வேண்டும், என்ன செபிக்க வேண்டும் என்பதை இச்செபமானது சொல்லித்தருகின்றது.

## 2.2. நள்ளிரவு வேளை நண்பன் பற்றிய உவமை (11:5-13)

இந்த உவமையானது பரலோக மந்திர செபத்தை தொடர்ந்து தரப்பட்டுள்ளது. இந்த உவமையின் மூலம் நாம் மனம் தளராது செபிக்கவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறு விடாமல் கேட்டுக்கொண்டிருந்த நண்பன் தன்னுடைய தேவையை நிறைவேற்றிக்கொண்டானோ அவ்வாறே நாமும் இறைவனை கூவி அழைத்து தொடர்ச்சியாக வேண்ட வேண்டும். நம்முடைய தேவைகளுக்கு இறைவன் உடனடியாக பதில் அளிக்காவிட்டாலும் மனம் உடைந்து விடாது தொடர்ச்சியாக செபிக்கவேண்டும் என்பதை இவ் உவமை படிப்பித்து நிற்கின்றது.

## 2.3. நீதியற்ற நடுவர் பற்றிய உவமை (18:1-8)

இந்த உவமையில் செபத்திற்கும் இறையரசுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு காட்டப்படுகின்றது. நம்பிக்கைகொண்டவர் இந்த கைம்பெண்ணைப்போல இறையரசின் வருகைக்காக இறைவனிடம் இடைவிடாது செபித்துக் கொண்டி ருக்கின்றனர். யார் யார் இறைவனில் நம்பிக்கை வைத்து தொடர்ந்து அவரிடம் வேண்டிக்கொண்டிருக்கின்றார்களோ அவர்களின் மன்றாட்டை இறைவன் வெகு விரைவில் செவிமடுப்பார் என காட்டப்படுகின்றது.

## 2.4. பரிசேயரும் ஆயக்காரரும் பற்றிய உவமை (18:9-14)

இந்த உவமையானது எவ்வாறான மனநிலையில் ஒருவர் செபிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது செபிப்பவர் தன்னை தாழ்த்துவதுடன் இறைவனில் முழுமையாக தங்கி வாழ்பவர்களாக இருக்கவேண்டும் எனவும் கூறி நிற்கின்றது.

# 3) மற்றவர்களின் வாழ்வில் செபம்

இயேசுவின் செபவாழ்விற்கு முக்கியத்துவம்கொடுத்து அவர் செபித்த பல சந்தர்ப்பங்களை குறிப்பிட்டு செபம் பற்றிய இயேசுவினுடைய போதனைகளையும் பதிவு செய்த தூய லூக்கா பல்வேறு விவிலிய நபர்கள் செபித்த சந்தர்ப்பங்களை யும் குறிப்பிடத் தவறவில்லை. இவற்றிற்கு சக்கரியா, எலிசபேத் போன்றோரின் செபங்கள் (1:10) அன்னாளின் செபம் (2:37-38) சிமியோனின் செபம் (2:28-32)

சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இதனைத்தவிர செக்கரியாவின் பாடல் (1:67-79) மரியாவின் பாடல் (1:46-55) என்பனவும் புகழ்ச்சி செபங்களாக அமைந்துள்ளன. இதனைத்தவிர சோதனைக்குட்படாதபடி செபிக்கும்படி யேசு சீடர்களுக்கு அழைப்புவிடுப்பதையும் (22:40,46) இறையரசின் வேளாண்மைக்கு பணியாளர்களை அனுப்பும்படி செபிக்க அழைப்பதையும் (10:2) உங்களை துன்புறுத்துவோருக்காக செபிக்கும்படி அழைப்பதையும் (6:22) லூக்கா சுட்டிக்காட்டி உள்ளார். மேலும் நீண்ட நேரம் இறைவனிடம் வேண்டுவது போல் நடித்து வெளிவேடத்தனமாக இருக்கும் மறைநூல் அறிஞர்களை சாடுவதன் மூலம் (20:47) உண்மையற்ற முறையில் வெளிவேடமாகச் செபிப்பவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றார்.

முடிவாக

இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு செபித்ததை, செபம் பற்றிய இயேசுவின் போதனைகளை பல்வேறுபட்ட விவிலிய நபர்கள் செபித்ததை பல்வேறு தேவைகளுக்காக இயேசு செபிக்கும் படி அழைப்பு விடுப்பதை கோடிட்டுக் காட்டியதன் மூலம் தூய லூக்கா எம் ஒவ்வொருவரையும் செப வீரர்களாக மாற அழைப்பு விடுக்கின்றார்.


இன்று பல கிறிஸ்தவர்களின் வாழ்வில் செபம் என்பது நாளாந்தம் கடமைக்காக செய்யும் செயல் போல் ஆகிவிட்டது. பல தடவைகளில் செபங்கள் அதில் பொதிந்துள்ள அர்த்தத்தை இழந்து வெறும் வாய்ச்சொல்லாக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் செபம் அவர்களுடைய மனதை, வாழ்வை உரசிப் பார்ப்பதில்லை.

இயேசு தந்தையிடம் மிகவும் ஒன்றிணைந்த உறவு நிலையை செபத்தின் மூலமே பேணினார். இதன் மூலம் நாம் எவ்வாறு செபத்தில் இறைவனுடன் ஒன்றிக்கவேண்டும் என முன்மாதிரிகை அளித்துள்ளார். செபம் பற்றிய இயேசுவின் உதாரணங்கள் நாமும் அவ்வகையான அனுபவத்தை பெற எம்மை அழைத்துநிற்கின்றன. வாய்ச்சொற்களில் தொடங்கும் எம் செபம் இன்பம் துன்பம் நிறைந்த எம் வாழ்வில் நம்மை தந்தையோடு இணைக்குமாயின் நாமும் இயேசுவைப்போல் செபவாழ்வில் நிறைவெய்த முடியும். அவர் வாழ்ந்த வாழ்க்கையைத்தான் இயேசு செபமாய் வடித்து நமக்கு கற்பித்திருக்கின்றார். இயேசுவைப்போல் எம்முடைய செபங்களும் நம்முடைய வாழ்க்கையோடு பின்னிப்பிணையும் போது நாமும் கடவுளுடன் தந்தை மகன் உறவில் உரையாடி அவருடைய ஆட்சியையும் திருவுளத்தையும் ஏற்று கீழ்ப்படிவுடன் வாழ்ந்து இறையரசை இவ்வுலகில் நிலைநாட்டும் சாட்சிகளாகின்றோம்.

# மனித மாண்பை வேரறுக்கச்செய்யும் கருவழிப்பு

நி. மரிய பெய்லன் குருஸ்
4ம் வருட இறையியல்

## முன்னுரை



வன்முறைக்கலாச்சாரமும், சாவுக்கலாச்சாரமும் தலைவிரித்து தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இந்த பின் நவீனத்துவ காலத்தில் ஆன்மீக அக்கறையும், மனித நேயமும் அற்றுப்போய் ஒழுக்கவியல் கோட்பாடுகள் செயலற்றுப்போய்விட்டன. அன்புமயமாய் வாழ அழைக்கப்பட்ட மனிதன் ஒழுக்கமற்ற கொடூரமான கலாச்சாரத்தை விதைத்து மனித மாண்பை இழந்துவிட்டான். இதனால் விலைமதிப் பற்றதும், மாண்பு மிக்கதுமான உயிர், இன்று விலை நிர்ணயிக்கப்படும் விற்பனைப் பொருளாய் மாறியுள்ள நிலை வேதனைக் குரிய விடயமே. கடவுள் ஒருவரே மனித உயிரின் முதல்வரும், உரிமையாளரு மாவார். எனவே எந்தவொரு மனிதருக்கும் தமது உயிரையோ அடுத்தவர் உயிரையோ பறிக்க உரிமையில்லை. ஓர் உயிர் உருவாகின்ற கருவறை புனிதமாகவும், உயர்வாகவும் கருதப்பட்டாலும், இன்றைய காலங்களில் கருவறைகள் கொலைக்களங்களாக மாற்றப்படும் அவலம் உருவாகியுள்ளது. இவ்வாறு மனித மாண்பை சீரகுலைக்கும் செயல்களில் முக்கியமானதொன்றாகிய கருவழிப்பை முற்றாக எதிர்த்து போராடும் திருச்சபை, இறைவனுடைய படைப்பாற்றலில் இறைவனுக்கு ஒத்துழைப்பு வழங்க அழைக்கப்பட்டவர்கள் பெற்றோர் என்பதை உணர்த்துகிறது. இத்தகைய மாபெரும் கடமையை பெற்றுக்கொள்ளும் பேறுபெற்ற பெற்றோர் அதாவது கணவன் மனைவி அல்லது தாய், தந்தை ஆகியோர் இப்பொறுப்பின் கனாகனத்தை உணர்ந்து தம் மூலமாக

உருவாகும் ஒவ்வொரு குழந்தையும் இறைவனின் மாபெரும் திட்டத்தின் பங்காளியாகின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறது. மனித மாண்பை வேரறுத்து மானிடத்துக்கு எதிராக செய்யப்படும் மாபெரும் பாதகமாகிய கருவழிப்பு ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா போன்ற பல நாடுகளில் சட்டப்பூர்வமாகியுள்ள போதும் எமது கத்தோலிக்க திருச்சபை இக்கருவழிப்பை முற்றுமுழுதாக கண்டிக்கின்றது. தொடருகின்ற இக்கட்டுரையில் கருவழிப்பு பற்றியும் கருவழிப்பை பொறுத்தமட்டில் திருச்சபையின் நிலைப்பாடு பற்றியும் ஆராய்வோம்.

## கருவழிப்பு வரைவிலக்கணம்

கருவழிப்பு என்பது ஒரு தாயினுடைய கருவறையிலே உருவாகி வளரும் உதவியற்ற கருவினை (Non viable) முழு அறிவு, சுதந்திரம், விருப்பத்தோடு தாயினுடைய கருவறைக்குள் வைத்துக்கொலை செய்தல் அல்லது கருவை உயிருடன் வெளியேற்றி அது இறந்துவிட அனுமதித்தல் எனலாம். ஓர் ஆணினுடைய உயிரணுவும் (sperm) பெண்ணின் முட்டையும் (ovam/egg) ஒன்றாக இணையும்போது உண்டாகும் மனித கரு, உயிர் பெறுகின்ற அக்கணமே அது முழு மனித மாண்பைப் பெற்றுக்கொள்கின்றது. கருவழிப்பானது மனிதனின் தலையீட்டினால் இடம்பெறும் பொழுது, அச்செய்கை பாவம் மட்டுமல்ல, அது மானிடத்திற்கெதிராக செய்யப்படும் மாபெரும் பாதகமாகும்.

## கருவழிப்பினை நேரடி கருவழிப்பு, மறைமுக கருவழிப்பு என இருவகைப்படுத்தலாம்

## 1.1 நேரடி கருவழிப்பு (Direct Abortion)

நேரடி கருவழிப்பு என்னும்போது தாயின் கருவறையில் உருவாகி இருக்கக்கூடிய கருவை கொலை செய்தலாக அமைகின்றது. இக்கருவழிப் பின்போது அதன் நேரடியான நோக்கமாக கருவழிப்பு என்பதால் அதை நேரடி கருவழிப்பு என்கிறோம். கத்தோலிக்க திருச்சபையானது அனைத்து நேரடியான கருவழிப்பு வகைகளையும் கண்டிப்பதோடு அச்செயற்பாடு தன்னிலே தீமையான தாக இருக்கிறது எனக் கற்பிக்கிறது.

## 1.2 மறைமுகமான கருவழிப்பு (Indirect Abortion)

ஓர் மருத்துவச் செயற்பாட்டின்போது கருவை அழிப்பதை நேரடியான நோக்கமாக கொண்டிராமல் மருத்துவ செயற்பாட்டின் விளைவாக அமையும்போது

கருவானது அழிந்துவிடும் என்று தெரிந்திருந்தும் அதைச்செய்து கரு அழிந்துவிட அனுமதித்தல் ஆகும். கருவினுடைய வெளியகற்றல் முன்னதாகவே அறியப் பட்டாலும் செயற்பாட்டின் நோக்கமும் முடிவும் கரு வெளியகற்றலாக இருப்ப தில்லை. அதேவேளை அச்சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவரின் எண்ணமும் கருக்கொலையாக இல்லாததன் காரணமாக திருச்சபை இத்தகைய செயற் பாடுகளை ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எந்தளவிற்கு ஒரு தாயின் உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக கருவைக் கொலை செய்யலாம் என்பது கேள்விக் குரியது. இத்தகைய வினாக்களுக்கு நாம் இரட்டை விளைவுக்கொள்கை கோட்பாட்டைப் (Principle of double effect) பிரயோகப்படுத்த வேண்டும்.

## 1.3 இரட்டை விளைவுக்கோட்பாடு (Principle of Double effect)

உதாரணமாக, கருவுற்றிருக்கும் பெண்ணின் கருப்பையில் புற்றுநோய்க்கட்டி இருக்கிறது. நோயைக் குணப்படுத்த மிகவும் சக்தி வாய்ந்த மருந்தைக் கொடுத் தால் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த செயற்பாட்டின் விளைவு நன்மையே எதிர்நோக்குவதாக இருக்க வேண்டும். ஒரு நல்ல செயற்பாடு தீமையான எண்ணத்தோடு செய்யப்படுமா னால் அது தீமையானதே ஆகும். தீமையான விளைவு எக்காரணங் கொண்டும் விரும்பத்தக்கது அல்ல. ஆனால் இரட்டை விளைவுக்கோட் பாட்டின் அனைத்து அம்சங்களும் பூர்த்தி செய்யப்படும்போது அனுமதிக்கப்படலாம். (It is permitted) தீய விளைவை எண்ணுதல் எப்போதும் பிழையா னது ஆகும். உதாரணமாக, புற்று நோய்க்கான சிகிச்சையின்போது தாயினுடைய குணமாக்கல் கருத்தில் கொள்ளப்பட்டது. நேரடியாக யாருமே குழந்தையை கொலை செய்யாமலும், வேறு வழியின்றி குழந்தையின் சாவு ஓர் இன்றியமையாத தீமையாகச் சகித்துக்கொள்ளப்படுகிறது. (Necessary Evil) இந்த முறையானது அறநெறிக் கோட்பாட்டின்படி சரியானதாகும். இங்கே அனுமதிக்கப்படும் தீமையான விளைவானது நன்மைக்கு சமனானதாக (Proportionate) இருக்க வேண்டும். அல்லது பெறப்படும் நன்மையானது ஒப்பிடும்போது தீமையான விளைவு



எக்காரணம் கொண்டும் அதிகளவாக இருக்கக்கூடாது. நன்மையும் தீமையும் ஒப்பீட்டளவில் சமமானதாக இருக்கவேண்டும்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் கருவுற்றிருக்கும் தாயின் கருப்பையில் இருக்கும் புற்றுநோய்க்கட்டியால் தாயின் உயிருக்கு ஆபத்து என்கிறபோது கருப்பையைக் கட்டாயம் அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் கருப்பையை அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றும்போது அதன் விளைவாகக் குழந்தை இறக்க நேரிட்டால் அது நேரடிக் கொலையாகாது. சுருக்கமாக, கூடிய மட்டும் தாயின் உயிரையும், கருவின் உயிரையும் காப்பாற்ற மருத்துவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் தாயின் உயிரைக் காப்பாற்ற நேரடியான கருவழிப்பை (Direct Abortion) அனுமதிக்க முடியாது. மாறாக இரட்டை விளைவுக் கொள்கைக்கு ஏற்ப முறைமுகமான கருவழிப்பை அனுமதிக்கலாம். (Indirect Abortion)

## 2. விவிலியம் பேசுகிறது

திருவிவிலியத்தின் ஒளியில் கருவானது, மனித உயிர் என்ற உண்மை புலனாகிறது. கடவுள் மனிதரை அவர்தம் தாயின் கருவில் உருவாகும் போதே தெரிவு செய்கிறார். கருவைப் பல்வேறு நிலைகளில் வளரச்செய்கின்றார். மரியன்னையின் கருப்பையில் இருந்த இயேசுவை அவர் கருவான ஒரு சில நாட்களிலே எலிசபேத்தின் கருப்பையில் கருவாக இருந்த திருமுழுக்கு யோவான் அடையாளம் கண்டு மகிழ்ச்சியால் துள்ளினார். இரு தாய்மார்கள் பேசும்போது இன்னமும் பிறக்காத இரு குழந்தைகள் பேசிக்கொள்கின்றனர். (காண். லூக். 1:41)

கடவுள் இறைவாக்கினர் எரேமியாவுக்கு கூறியது. தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறருக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். (எரே. 1:15)

தாயின் கருவில் மனிதர் வியத்தகு முறையில் உருவாகுவதை திருப்பாடல் சிறப்பான முறையில் எடுத்துரைக்கிறது. "என் உள் உறுப்புக்களை உண்டாக்கியவர் நீரே. என் தாயின் கருவில் எனக்கு உருத்தந்தவர் நீரே' (தி.பா. 139:13) இவ்வாறு பலவகையான கருத்துக்களை தன்னகத்தே கொண்டு மனித உயிரின் மாண்பை விளக்குவதை திருவிவிலியத்தில் காண்கின்றோம்.

## 2.1 திருச்சபையின் நிலைப்பாடு

இன்று உலக அரங்கில் மனித ஒழுக்க விழுமியங்கள் விலை பேசப்பட்டு, மனித இனம் பாலுணர்வுகளால் உந்தப்பட்டு மிருகத்தன்மையை விட மோசமான

நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் மனித உயிரின் மகத்துவத்தைப் பாதுகாப்பதோடு அதைப் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது இன்றியமையாத ஓர் தேவையாக இருக்கிறது. இப்பணியைத் திருச்சபை செவ்வனே ஆற்றிவருகிறது. கத்தோலிக்கத் திருச்சபையானது எந்த நிலையிலும் கருவழிப்பை முற்றாக நிராகரிக்கின்றது. மனித மாண்பு அழிக்கப்படும்போது திருச்சபை அமைதியாக இருந்துவிட முடியாது என 11ம் பத்திநாதர் Casti connubii என்னும் திருமடலின் வழியாக விளக்குகிறார்.

திருச்சபைப் பாரம்பரியமானது மனித உயிரின் வளர்ச்சியின் அனைத்துப் படிமுறைகளும் குறிப்பாக தொடக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகிறது. முதலாம் நூற்றாண்டிலிருந்து திருச்சபையானது கருவழிப்பு மேற்கொள்ளுதல் தீமையானது எனக் கற்பித்து வருகிறது. இப்போதனையானது மாற்றமடையவும் இல்லை. மாற்றப்படவும் முடியாததாகும். தொடக்கத் திருச்சபையின் முக்கியமான ஏடுகளில் ஒன்றான டிடாக்கே பின்வருமாறு கூறுகிறது. கருவழிப்பின் மூலம் உனது கருவறையில் வளரும் கருவைக் கொலை செய்யாதோர் உன் வயிற்றிலிருந்து பிறந்த சிசுவைக் கொலைசெய்தல் ஆகாது. (கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு. பக். 2271)

"தந்தையாம் கடவுள் மனித உயிரைப் பாதுகாக்கும் உயர்ந்த பணியை மனிதனின் கரங்களில் ஒப்படைத்துள்ளார். எனவே மனிதர்களாகிய நாம் இப்புனித பணியை பிரமாணிக்கத்தோடு நிறைவேற்ற வேண்டும். உயிரானது கருக்கட்டல் நிகழும் நிமிடத்திலிருந்து மிகவும் காத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். கருவழிப்பும் குழந்தைக் கொலையும் மாபெரும் குற்றமாகும் எனவும் அந்த மறைக்கல்வி ஏடு விளக்கி நிற்கிறது.

திருச்சபை வரலாற்றில் திருச்சபைத் தந்தையர்களும் ஆன்ம மேய்ப்பர்களும் மேற்குறிப்பிட்ட கருத்தையே போதித்து வந்துள்ளார்கள். தாயினுடைய உயிரைக் காப்பாற்றும் நோக்கில் மருத்துவநோக்கிலான கருவழிப்பை திருச்சபையின் தந்தையர்களில் ஒருவரான தேர்த்துலியன் (220 கி.பி) கொடூர கொலை என்பதை திருத்தந்தை வலியுறுத்தி கருவழிப்பை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளமுடியாது என திட்டவட்டமாக கூறுகிறார்கள். சிறப்பாக திருத்தந்தையர்களான 11ம், 12ம் பத்திநாதர், 6ம் சின்னப்பர் கூட கருவழிப்பை முற்றாக நிராகரிக்கிறார்கள்.

ஏனெனில் உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார். இப்பணியை மனிதத் தன்மைக்கு

ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதன் கடமைப்பட்டுள்ளான். ஆகவே கருவறையில் இருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். (நவீன உலகில் குடும்பம் - 51) பிறக்காத ஒவ்வொரு குழந்தைக்கும் இவ்வுலகில் பிறக்கவும், வாழவும் உரிமை உண்டு என்பதை திருச்சபை வலியுறுத்துவதோடு மனித மாண்பிற்கு கொடுக்கப்படும் மரியாதையும் கௌரவமும் குழந்தைகளுக்கு வேறுபட்டதாகவும் வளர்ந்தோருக்கு வேறுபட்டதாகவும் இருக்கமுடியாது என்பதையும் உணர்த்துகிறது. கட்டளையும், மனித அறிவும் எந்தவிதமான நேரடி முறையிலான கருவழிப்பை நியாயப்படுத்த முற்படும் எல்லாவிதமான சிந்தனைகளும் தீமையானதாகவும் பெறுமதியற்றவையாகவுமே கணிக்கப் படுகின்றது. இதனால் கத்தோலிக்க வைத்தியர்களும் தாதிமார்களும் மற்றும் சுகாதார ஊழியர்களும் தமது சகபாடிகளுக்கு தமது உயிர்காக்கும் உறுதிப் பாடுகளைத் தெரிவித்து கத்தோலிக்க ஒழுக்கவியல் கோட்பாடுகளுக்கு இணங்க மனித உயிரின் புனிதத்தன்மையை பாதுகாத்து கிறிஸ்துவுக்கும் அவருடைய அன்பிற்கும் உன்னத சான்று பகர வேண்டும்.

## முடிவுரை

மனித உயிருக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதை வெறுமனே கிறிஸ்தவ கடமைப்பாடு மாத்திரமன்று. சாதாரண மனித அறிவியல் இக்கடமையை வலியுறுத்துகின்றது. சுய அறிவைக் கொடையாகப் பெற்றுள்ள மனிதன் தனது மனிதத்தன்மையில் தனது அறிவையும் புத்தியையும் பயன்படுத்தி மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், எவ்வாறு வாழக்கூடாது, எந்தளவிற்கு மனித உயிரை மதிக்க வேண்டும் போன்ற நிலைப்பாடுகளை எடுத்துக்கொள்ளக்கூடியவனாக இருக்கிறான். தன்னுடைய சுய அறிவை கொண்டு தனது இருப்பைப்பற்றி தியானித்துக் கொள்வதோடும் தனது இலக்கை நோக்கி பயணிக்கக்கூடியவனாக இருப்பதோடும் சுதந்திரமாக வாழ்வை செலவிடுவதில் பொறுப்பு மிக்கவனாகவும் வாழ மனிதன் அழைக்கப்படுகிறான். எம்மதத்தை சார்ந்திருப்பினும் உயிர்க்கொலை தவறானது எனும் சுய புத்தியுடன் செயற்பட அழைக்கப்படுகிறான்.

மனித உரிமைகளில் முதன்மையானதும் அடிப்படையானதுமான உயிர்வாழும் உரிமை பற்றிய அனைத்து உரிமைகளுக்கும் மேல்வரிச்சட்டமாக உள்ளது. உயிர்வாழும் உரிமையை நிர்ணயிக்கும் உரிமை சமூகத்திற்கோ, வேறு எந்த அதிகாரிகளுக்கோ இல்லை. எனவே சமூக, பால், நிற, மத வேறுபாடுகள் அனைத்தும் தீமையானதே. எந்த மதத்தையோ, நிறத்தையோ, இனத்தையோ, பாலையோ சேர்ந்தவர்களும் இவ்வுலகத்தில் வாழ உரிமையுண்டு.

காரணம் இவற்றை நிர்ணயிப்பவர் இறைவன் ஒருவரே. இறைவன் மனிதனுக்கு கொடுத்த பொதுவான கொடை இந்த உலகு. இதில் இறைவன் படைத்த மனிதர் அனைவரும் வாழ உரிமையுடையவர்களாக உள்ளார்கள். எனவே எக்காரணங்களைக் கொண்டும் கருக்களை அழிக்கும் செயல் கொடூரமான கொலையே. எனவே கருவழிப்பை நியாயப்படுத்த முற்படும் எல்லாவிதமான சிந்தனைகளும் தீமையானதாகவும் பெறுமதியற்றதாகவும் கருதப்படுகிறது. இவ்வாறு மனித சமூகம் உயர்வாக மதித்துப் போற்றும் அடிப்படையான கொள்கைகளை, கருவழிப்பு முயற்சி தவிடு பொடியாக்குகிறது. ஏனெனில் உயிரின் ஆண்டவராகிய கடவுள் உயிரைக் காக்கும் உயரிய பணியை மனிதரிடத்தில் ஒப்படைத்துள்ளார். இப்பணியை மனிதத்தன்மைக்கு ஏற்ற முறையில் நிறைவேற்ற மனிதர் கடமைப்பட்டுள்ளார். ஆகவே கருவறையிலிருந்து உயிரை மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். (G.S. இன்றைய உலகில் திருச்சபை - 51)

திருமணம் எனும் கட்டுக்கோப்பில் இறைவன் அளிக்கும் அன்பு ஆசியின் கனிகளாக குழந்தைகள் திகழ்கிறார்கள். தாய்மைப்பேறானது குடும்ப அமைப்பினுள் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் சமூகமும் திருச்சபையும் கருத்தாய் இருக்கிறது. எனவே திருமண கட்டுக்கோப்பை உடைத்து மனித மாண்பை கீழ்த்தரப்படுத்தும் இழிவான முயற்சியில் ஈடுபடுவோர்க்கு எதிராக உழைக்கும் திருச்சபையுடன் இணைந்து மனித உயிரின் மகத்துவத்தை பேணி பாதுகாத்து இறைசாயலாக படைக்கப்பட்ட மனிதனின் மாண்பை கட்டியெழுப்புவது கிறிஸ்தவராகிய எமது முக்கிய கடமையாகும்.

# குடும்பங்கள் - தூய ஆவி குடிகொள்ளும் ஆலயங்கள்...

அருட்சகோ. அ. துஷ்யந்தன்
3ம் வருட இறையியல்
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி

முன்னுரை

"மனித மாண்பை வளர்க்கின்ற குடும்பங்களை உருவாக்குவோம்" என்கின்ற தொனிப்பொருளில் எமது தமிழ் மறைமாட்டங்களில் இந்த ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏனெனில், மாறிவருகின்ற இன்றைய நுகர்வுக் கலாசாரத்தினாலும், விண்ணைத் தொடுகின்ற விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றத்தினாலும், யுத்தத்தின் பாதிப்புக்களாலும், வேலியே பயிரை மேய்கின்ற நிலையிலமைந்த எமது பாதுகாப்பு அமைப்புக்களாலும், இன்னும் திரை மறைவிலே நடந்தேறுகின்ற பலவிதமான சீர்கேடுகளாலும் இன்று குடும்பங்கள் புனிதமான, உண்மையான, விசுவாச சாட்சிய வாழ்வில் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன.


இந்நிலையில், இன்று எம்மண்ணில் அதிகளவில் இடம்பெறுகின்ற குடும்பக் குலைவுகள், குழப்பங்கள் மற்றும் பாலியல் ரீதியிலான பிறழ்வுகளுக்கு காரணமான பல முறைகேடான பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, ஒழுக்க இறையியலின் பார்வையில், திருமணத்தின் சிறப்பான தன்மைகளும், குடும்பங்களின் மட்டில் திருச்சபையின் எதிர்பார்ப்புக்களும் இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

## 1. திருமணத்தின் இயல்புகள்

திருமணமென்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலே உண்டாகு கின்ற ஓர் உன்னதமான பிணைப்பாகும். இத்திருமணத்தின் இயல்புகளாக பின்வருவனவற்றை நோக்கலாம்.

1.1 திருமணம் ஓர் உடன்படிக்கை
1.2 திருமணம் ஓர் அழைப்பு
1.3 திருமணம் ஓர் அருட்சாதனம்
1.4 திருமணம் ஒரு சமூக நிறுவனம்

### 1.1. திருமணம் ஓர் உடன்படிக்கை



உடன்படிக்கை என்பது இரு கட்சியினருக்கிடையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவர்களின் முழு அறிவுடனும், சுதந்திரத்துடனும் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பூரண சம்மதமாகும். அந்த வகையில் திருமணமும் ஓர் உடன்படிக்கையாகும். இங்கே தம்பதியர் தமது ஆன்மீக, உடலுள, உணர்வுரீதியான ஓர் உன்னத உறவுக்காகவும் ஒன்றிப்புக்காகவும், 'துன்பத்திலும் இன்பத்திலும் நோயிலும் சுகத்திலும்' ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதியளித்து இவ்வுடன்படிக்கையை நிறைவேற்றிக் கொள்கின்றனர். சமத்துவமும் முழுமையான பிரமாணிக்கமும் இவ்வொன்றிப்புக்கு அடிப்படையாகின்றன.

இவ்வுடன்படிக்கையானது தம்பதியினரின் பாலியல் ரீதியான துணைக்கும், உள்ளார்ந்த நட்புறவுக்கும், ஆன்மீக, பொருளாதார துணைக்கும் அவசியமாவதோடு, பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் அவர்களுக்குக் கல்வியளித்து வளர்த்தெடுத்தலாகிய இரு நோக்கங்களையும் கொண்டு அமையப்பெற்றதாகும்.

### 1.2. திருமணம் ஓர் அழைப்பு

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருமணத்தை ஓர் உன்னத அழைப்பு என்று கூறுகின்றது (இ. உ. தி. இல. 47a). ஏனென்றால் ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நிலைக்கு கடவுளால் அழைக்கப்படுகிறான். அதாவது குருத்துவ துறவற வாழ்வு மட்டுமன்றி திருமண வாழ்வும் ஒரு வகையான அழைப்பாகும். "கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இனி இருவரும் ஒரே உடலாய் இருப்பர்" (தொ.நூ.2:24). இது, திருமணம் உலகத்தின் தொடக்கத்திலேயே இறைவனால் வழங்கப்பட்ட மாபெரும் அழைப்பு என்று குறிப்பிடுகின்றது.

எனவே, கிறிஸ்தவ இளைஞர் யுவதிகள் இந்த அழைப்புக்கு தாம் தகுதியுள்ளவர்களா? என்று கடவுள் முன்னிலையில் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். இந்த மேன்மைமிக்க அழைப்புக்கு தம்மை சீரான முறையில் ஆயத்தம்

செய்வதோடு தமது எதிர்காலத் துணையை தெரிவு செய்வதிலும் கரிசனையுடனிருக்க வேண்டும். செல்வத்தையோ, சமூக அந்தஸ்தையோ, வெளிவாரியான அழகையோ கருத்திற் கொள்ளாமல் பிரமாணிக்கமுள்ள அன்புக்கும், பரஸ்பர மரியாதைக்கும் நம்பிக்கைக்குரியவர்களையே தெரிவு செய்வது அவர்களின் தலையாய கடமையாகும்.

## 1.3. திருமணம் ஓர் அருட்சாதனம்

ஆதியாகமத்தில் நாம் காண்பது போன்று திருமணம் இறைவனால் நேரடியாக ஏற்படுத்தப்பட்ட ஓர் அருட்சாதனமாகும். 2ம் வத்திக்கான் சங்கத்தின் கருத்துப்படி, திருமண அருட்சாதனத்தின் மூலம் கிறிஸ்து, தம்பதியினரின் வாழ்வுக்குள் நுழைந்து, அவர்களுடன் தங்கிவிடுகிறார். இதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் நித்தியத்துக்கும் பிரமாணிக்கமாய் அன்பு செய்யக் கூடியவர்களாகிறார்கள் (இ. உ. தி. இல. 48).

திருமண அருட்சாதனத்திலே உருவாகுகின்ற அருளானது தம்பதியர்களுக்கிடையிலான அன்பை நிறைவு செய்வதோடு, கட்டவிழாத ஒன்றிப்பையும் உறுதிப்படுத்துகின்றது. இந்த அருளின் மூலாதாரமாக இருப்பவர் கிறிஸ்துவே. திருமணம் கிறிஸ்து திருச்சபையினூடாக வழங்குகின்ற ஓர் அருளின் கொடையாகும். கிறிஸ்து தம்பதியினருடன் வாழ்ந்து அவர்கள் தம் அன்றாடச் சிலுவைகளைச் சுமந்து கொண்டு தன்னைப் பின்பற்றவும், வீழுகின்ற போதெல்லாம் மீண்டும் எழவும், ஒருவரை ஒருவர் மன்னிக்கவும், ஒருவர் ஒருவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ளவும், ஒருவரையொருவர் புரிந்துணர்வுடன் ஏற்று அன்பு செய்யவும் வலிமையூட்டுகின்றார். கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி இல. 1642 கூறுவதுபோல், இவ்வுலகத்திலே தம்பதியர் தம் அன்பினாலும் குடும்ப வாழ்வினாலும் அனுபவிக்கின்ற மகிழ்ச்சியானது விண்ணகத்திலே செம்மறியின் திருமண விருந்தில் அவர்கள் அடையப் போகின்ற நித்திய மகிழ்ச்சியின் முன்சுவை ஆகும்.

## 1.4. திருமணம் ஒரு சமூக நிறுவனம்

திருவிவிலியத்தில் உள்ளபடி திருமணம், இறைவனால் உருவாக்கப்பட்ட ஒரு அன்புக்குழுமம் அல்லது வாழ்வளிக்கும் குழுமமாகும். இந்தக் குழுமமே குடும்பம் என அழைக்கப்படுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருமணத்தை ஒரு நிறுவனம் என்கிறது. ஏனெனில் குடும்பமே சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் உயிரளிக்கும் கருவாகும்.



மனிதனின் கலாசாரத்துக்கும், மனிதத்தின் வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக இருக்கின்ற குடும்பமானது அடிப்படையானதும் மிகப் பழையதுமானதுமான சமூக நிறுவனமாகும். திருமணம் அல்லது குடும்பம் தனது பாதுகாப்பையும், மாறாத்தன்மையையும், தனது செயற்பாடுகளையும் நிறைவேற்றிக் கொள்ள சமுதாயமே உத்தரவாதமளிக்கிறது. சிறப்பாக கிறிஸ்தவ திருமணத்தின் வெற்றிக்கு திருச்சபை அவசியமாகிறது.

ஆனால் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற, திருமணத்தை ஒரு சமூக நிறுவனமாக நோக்காத போக்கு பலவிதமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இன்று இளையோர் பலர் திருமணத்தை ஆலயத்தில் நிகழ்த்த மட்டுமன்றி, சட்டரீதியான பதிவுகளையும் மேற்கொள்ள மறுக்கின்றனர். சமூக நிறுவனமாகிய குடும்பத்திற்கு எதிராக பாதுகாப்பும் சட்டரீதியில்லாத பாலியல் ஒன்றிப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட இத்திருமண முறை சமுதாயத்தின் கட்டுக்கோப்பான ஒழுக்கவியல் வாழ்வுக்கு பெரும் சவாலாகும். இத்தகையோர் சமூகத் தோற்றப்பாடுகளுக்கும், திருமண ஒன்றிப்புக்கு அடிப்படையான பாலியல்பு மட்டிலும் குருடர்களாவர். இவ்வாறு சமுதாயத்தின் திருமண அமைப்புக்குள் கட்டுப்படாதவர்கள் சமூதாயத்தின் ஒத்துழைப்பையும் அங்கீகாரத்தையும் இழந்து விடுவர்.

## 2. திருமணத்தின் நோக்கம்

திருமணத்திற்கு இரு பிரதான நோக்கங்கள் உண்டு. அவை பரஸ்பர ஒத்துழைப்பும் அன்பின்நிறைவும், பிள்ளைப்பேறும் அவர்களின் கல்வியுமாகும். இவற்றை ஒவ்வொருவரும் நன்கு தெரிந்து தெளிந்து கொள்ளும்பொது மேம்பட்ட ஓர் இல்லற வாழ்வை வெற்றியோடு வாழ்ந்து காட்ட முடியும்.

### 2.1. பிள்ளைப்பேறும் அவர்களின் கல்வியும்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருமணத்தினதும், தாம்பத்திய அன்பினதும் நோக்கம் பிள்ளைப்பேறும் அவர்களின் கல்வியும் என்கின்றது. பெற்றோர் குழந்தைகளைப் பிறப்பித்து அவர்களுக்கு கல்வி புகட்டி வளர்ப்பதை தம்

சிரமேற்கொண்டு செயற்பட திருச்சபை அழைப்பு விடுக்கின்றது (இ. உ. தி. இல. 50a). பொறுப்பு மிக்க பெற்றோர் குழந்தைகளைப் பிறப்பிப்பது மட்டில் பின்வரும் விடயங்களில் மிகவும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

- குடும்பத் திட்டமிடல்: ஒரு பிள்ளைக்கும் அடுத்த குழந்தைக்கும் இடையிலான கால இடைவெளி, பிள்ளைகளின் எண்ணிக்கை - கணவன் மனைவி இருவரும் சேர்ந்து தம்மிடம் ஏற்கனவேயுள்ள பிள்ளைகளையும் கருத்திற்கொண்டு, தமது பொருளாதார வளங்கள், பரஸ்பர அன்பு, பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் ஆற்றல்கள், தமது உடலுள வலு போன்றவற்றையும் கருத்திற்கொண்டு திட்டமிடல் செய்ய வேண்டும்.

குடும்ப திட்டமிடலானது வெற்றிமிக்க மகிழ்ச்சிகரமான திருமண வாழ்வுக்கு அவசியமாகும். இதேவேளை தமது சொந்த, சுய நலத்துக்காவோ அல்லது சிற்றின்ப விருப்புக்களுக்காகவோ பிள்ளைகளைப் பெற்றெடுப்பதை வரையறுத்துக் கொள்வது பாவமாகும்.

- குடும்பக்கட்டுப்பாட்டு முறை - குழந்தை கருத்தரித்தலை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற நிரந்தர கருத்தடை (sterilization) மற்றும் செயற்கைக் கருத்தடை முறைப்பாவனை (artificial means of contraception) என்பன திருச்சபையின் மரபு ரீதியான படிப்பினைக்கு எதிரானவையும், ஒழுக்கவியலுக்குப் புறம்பானவையுமாகும்.

இதனால் திருச்சபையின் திருவாட்சிப்பீடம் வெண்கசிவு முறை (mucus method) மற்றும் ரிதம் (rhythm method) முறைகளை அறிமுகம் செய்கிறது. இங்கு ரிதம் முறையானது மாதவிடாய்ச் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு, கருத்தாங்குவதைத் தவிர்த்துக்கொள்ளக் கூடிய காலத்தில் உடலுறவில் ஈடுபடுதலாகும். ஆனாலும் இம்முறை பல தம்பதியருக்கு வெற்றியளிக்காததை சிந்தையிற்கொண்டு ஆயர்கள் மன்றம் பல பயனுள்ள விளக்கங்களையும், விதிவிலக்குகளையும் அளித்துள்ளது.

- செயற்கைக் கருத்தடை முறைகள் முற்றுமுழுதாக சாவான பாவமல்ல. இயற்கைக் கருத்தடை முறையைப் பின்பற்ற போதியளவு அறிவு இல்லாதவர்கள் நல்லுறவின் அடிப்படையில் செயற்கை முறையை பயன்படுத்தும்போது அவர்கள் தாம் கடவுளின் அன்பிலும் அருளிலுமிருந்து பிரிந்தவர்கள் என எண்ணக்கூடாது.

- சட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படாத கருத்தடை முறைகளைப் பயன்படுத்த விரும்பாத தம்பதியர் உடல் ரீதியான அன்புப் பகிர்வை தவிர்த்துக்

கொள்ளும்போது அவர்களின் திருமண வாழ்வையும் அன்புறவையும் தக்க வைத்துக் கொள்வது ஆபத்தாக மாறிவிடும். இந்நிலையில் அவர்கள் கருத்தடை முறைகளைப் பயன்படுத்துவதை சாவான பாவமாகக் கருதக்கூடாது.

**2. 2. பிள்ளைப்பேறு மட்டில் பெற்றோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**

உடலுறவு என்பது புனிதமான ஒன்று. கணவன் மனைவி தமது அன்பை ஆழமாகப் பகிர்கின்ற ஒரு வழியே இதுவாகும். உடலுறவு தனது சுயநலத்தைப் பூர்த்தி செய்வதாக அமையக்கூடாது. முக்கியமாக கணவன் மனைவியின் திருப்தியையும், மனைவி கணவனின் திருப்தியையும் கருத்திற் கொள்ளவேண்டும். இதைவிட உடலுறவின் முக்கியமான இன்னொரு நோக்கம் பிள்ளைப்பேறு ஆகும். ஆனால் பிள்ளைகளைக் கருவுற இயலாத நிலைமை உருவாகின்றபோது அங்கே பிரச்சினைகள் உருவாகத் தொடங்கிவிடுகின்றன.

I. செயற்கைக் கருத்தரிப்பு - இயற்கையான உடலுறவுக்கு புறம்பாக செயற்கைத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கருத்தரித்தல். இது இரு வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.

a) கணவன் உடலுறவு கொள்ள முடியாதவராகவோ அல்லது மலட்டுத்தன்மை மிக்கவராகவோ இருக்கின்றபோது மனைவி இன்னொரு கொடையாளியின் விந்தைப் பெற்று கருவைத் தாங்குதல் (heterologous).

இங்கே குழந்தைக்கு குடும்ப அந்தஸ்து கிடைக்கின்றபோதும் அதை தந்தை தனது வளர்ப்புப் பிள்ளையாகவே கருத வாய்ப்புண்டு. அத்தோடு, அப்பிள்ளை தந்தையின் மலட்டுத்தன்மையை நினைவூட்டி அவருக்கு அவமானத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு அடையாளமாகவும் அமைந்து விடலாம். ஆனால் பிள்ளைகள் எப்போதும் பெற்றோரின் ஒன்றிப்பான பிணைப்பின் அறிகுறியாகவும், மகிழ்வையும் பரஸ்பர நிறைவின் உணர்வையும் அளிப்பவர்களாக இருக்க வேண்டும்.

b) ஒரு திருமணமாகாத பெண்ணின் கருவில் ஒரு விந்தைச் செலுத்தி பிள்ளையைப் பெற்றுக் கொள்ளல் (homologous).

இங்கே பிள்ளைக்கு குடும்ப அந்தஸ்து மறுக்கப்படுவதோடு தந்தையையும் அறியாததாக இருக்கின்றது. குழந்தை தப்பான வழியில் பிறந்த குழந்தையாகவே கருதப்படும் (illegitimate child).


இது அக்குழந்தைக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இதனால் இம்முறை ஒழுக்கவியலில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திருத்தந்தை 12ம் பத்திநாதரின் கருத்தின்படி திருமண உறவுக்குள் இரண்டாவது செயற்கைக் கருத்தரிப்பு முறை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். அதாவது உடலுறவில் ஈடுபட முடியாத தம்பதியினரில், கணவனின் விந்தைப் பெற்று அதை மனைவியின் கருவில் செலுத்தி குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.

## II. சோதனைக் குழாய்க் குழந்தைகள் (In Vitro Fertilization)

பெண்ணின் சூல் முட்டைகளை சிகிச்சை முறையில் அகற்றி அவற்றை ஆணின் விந்துடன் இணைத்து பரிசோதனைக் குழாயில் வைத்து கருவூட்டி பின்னர் அதனை கருத்தரிக்கும் என்ற நம்பிக்கையோடு பெண்ணின் கருப்பையில் செலுத்துதல்.

திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள அமைப்பு (Congregation for the Doctrine of Faith) ஆராய்ச்சிக்காகவும் வர்த்தக நோக்கத்திற்காகவும் உயிருள்ள கருவை சோதனைக்குழாயுனுள் வைத் திருப்பது மனித மாண்புக்கு எதிரானது என்கின்றது. அதே வேளை மலட்டுத் தன்மையுள்ள தம்பதியினர் குழந்தை பெற்றுக்கொள்ள இம்முறை உதவி செய்கின்றபோதும், இவ்வமைப்பானது இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் இது திருமண உறவுக்கு புறம்பானதுடன் திருமண உடலுறவின் நோக்கத்தைச் சிதைப்பதாகவும் இருக்கின்றது.




## III. வாடகைத்தாய் (surrogate mother)

இன்னொருவரின் கருவைத் தனது கருவில் தாங்கும் பெண் வாடகைத் தாய் எனப்படுகிறாள். திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகளின் அமைப்பு 22.02.1987ல் வெளியிட்ட அறிக்கையின்படி வாடகைத்தாயானவள்

இன்னொருவரின் கருவை தன் கருவில் தாங்கிக் கொள்வதால் அக்குழந்தைக்கு அந்நியமானவளாக இருப்பதால் குழந்தையின் மனநிலையில் பாதிப்பு ஏற்படலாம்.

அதுமட்டுமன்றி அக்குழந்தைக்கு பெற்றோர் அந்நியர் போன்ற உணர்வு ஏற்படலாம். இது பிறக்கப்போகும் குழந்தையின் உரிமைகளை மீறுகின்ற ஒரு செயலுமாகும். இதை எல்லா ஒழுக்கவியல் இறையியலாளரும் எதிர்க்கின்றனர். ஏனெனில் இது, ஓர் உயிரின் பிறப்பிற்கு மூன்றாம் நபரின் தலையீட்டை எதிர்பார்க்கின்றது.



பிள்ளை பெற்றுக்கொள்ள முடியாத தம்பதியர் இவ்வாறான தவறான, ஒழுக்கவியலுக்கு எதிரான, உயிருக்கு ஆபத்தான முறைகளைப் பின்பற்றி பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதை விட, அன்புச் செயலின் அடிப்படையில் அநாதைப் பிள்ளைகளை சட்டரீதியில் தத்தெடுத்து வளர்ப்பதை திருச்சபை வரவேற்கின்றது.

## 3. திருமணத்தின் உடைமை

திருச்சபையின் சட்டத்தொகுப்பின்படி திருமணத்தின் முக்கியமான உடைமை ஒன்றிப்பும், கட்டவிழாத் தன்மையுமாகும் (தி.ச. 1056)

### 3. 1. ஒன்றிப்பு

ஆதியாகமம் 2:21ல் கூறப்பட்டுள்ளது போன்று கடவுள் ஆணின் விலாவிலிருந்து பெண்ணைப் படைத்தார். இதனால் இருவரும் எலும்பின் எலும்பும் சதையின் சதையுமாய் ஒன்றாகினார்கள். இவ்வாறு ஒருத்தனுக்கு ஒருத்தி என்கின்ற ஒன்றிப்பையே திருச்சபையும் வலியுறுத்தி வருகின்றது. இதற்கு பிரமாணிக்கம் அவசியமாகிறது. ஒருதாரத் திருமணமே (monogamy) இன்று அனைத்து ஒழுக்கவியல் இறையியலாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். இதற்கு பலதாரத் திருமணங்களின் (polygamy) விளைவுகளை அவர்கள் மேற்கோள் காட்டுகின்றனர்.

- இங்கு தம்பதியர் ஒருவருக்கொருவர் தம்மை முழுதாகக் கொடுக்க முடியாது. இது திருமணத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்றாது.

- பல தாரங்களுக்கிடையில் நிலவும் போட்டி, பொறாமை, பக்க சார்பு போன்றவை குடும்பத்தின் ஒற்றுமையைக் குலைப்பதோடு பிள்ளைகளின் வளர்ச்சியையும் பாதிக்கின்றது.
- பல பெண்களை ஒரு ஆண் திருமணம் செய்யும்போது அங்கு பெண்களின் மாண்பு மதிக்கப்படாது. அவர்கள் மனைவியர் என்பதை விட அடிமைகளாகவே கருதப்படுவர்.
- பல ஆண்களை ஒரு பெண் திருமணம் செய்யும்போது (polyandry) அங்கும் திருமணத்தின் நோக்கங்கள் பாதிக்கப்படுவதோடு கற்பு நெறியும் மீறப்படும்.

எனவே இயேசு மத் 19:8-9ல் கூறியது போல், ஒருவருக்கொருவர் கொடுத்த திருமண வாக்குறுதிக்கேற்ப இறுதிவரை பிரமாணிக்கமாய் ஒன்றித்திருக்க அழைக்கப்படுகின்றனர்.

### 3. 2. கட்டவிழாத்தன்மை

திருமணப்பிணைப்பானது எந்தவொரு மனித அதிகாரத்தாலும் பிரிக்கப்பட முடியாத இயல்பைக் கொண்டுள்ளது. மணவிலக்குக்கு எதிராக புதிய ஏற்பாட்டிலே பல சான்றுகளைக் காண்கிறோம். மத். 5:31-32, 19:3-9, 1கொரி. 7:10-16, லூக். 16:18. இரண்டாம் வத்திக்கான் சங்கம் மணவிலக்கைப் பின்வரும் காரணங்களுக்காக வரவேற்பதில்லை.

- இது தம்பதியருக்கு நன்மை பயக்காது. ஏற்கனவே திருமண அன்புறவில் உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றாகி விட்டவர்கள் பிரிகின்றபோது அது அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு குற்றவுணர்வையே அளிக்கும்.
- பெற்றோர் மணவிலக்கால் பிரிகின்றபோது பிள்ளைகள் தனித்து விடப்படுகின்றனர். அவர்கள் தன்னம்பிக்கையை இழந்து பாதுகாப்பில்லாத தன்மையையும் உணருகின்றனர். அவர்களின் கல்வியும் கேள்விக்குறியாகின்றது.



- சமூகத்தின் வளர்ச்சி, நிலையான குடும்பங்களில்

தங்கியுள்ளது. மணவிலக்கால் சமூகத்தின் ஸ்திரத்தன்மை ஆட்டங்காணும்.

- இறையியல் அடிப்படையில் பார்க்கும்போது திருமண அருட்சாதனமானது கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்குமிடையேயுள்ள ஒன்றிப்பின் அடையாளமாகும். எனவே மணவிலக்கு கிறிஸ்துவை பிளவுபடுத்துவதாக அமையும்.

**முடிவாக...**

திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று சொல்வார்கள். இவ்வாறு ஊர் கூடி நிற்க இறைவனின் திருமுன்னிலையில் ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்டு திருமண பந்தத்தில் இணைக்கின்ற தம்பதியர் தமது உன்னத அழைப்பின் மேன்மையை உணர்ந்து தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், பொறுப்புக்களையும் சீரிய உள்ளத்துடனும், தெளிந்த சிந்தையுடனும் செய்கின்றபோது குடும்பங்கள் கோவில்களாகும்.

ஒழுக்கத்தின் அடிப்படையில் விசுவாச சாட்சிய வாழ்வை வாழும்போது குடும்பங்கள் ஒவ்வொன்றும் தூய ஆவி தங்கும் கோவில்களாகும்.

# Synopsis

## Alternative Society of the Early Church

This essay pictures out the attempts of the early Christian communities in giving a break through as an alternative society in the prevailing social structure.

The piramidal structure was very strong at that time. The minority of the ruling party, being high and above was suppressing the majority of the ordinary people who have no say in the governing. The situation of these ordinary people was so pathetic.

So Jesus realized that this was not inn line with the plan of God. In this background Jesus gave birth to the dream of a kingdom and dedicated his life and preaching in introducing this alternative society.

Jesus' dream of the kingdom was experimented in the field of the early Christian communities. The life of the early Christians was a great break through during that time. Beginning from cell communities, the early Christian were on a rebellion, move without bloodshed, against the strong Greek and Jewish structures.

Even though the attempt was a failure, we can not simply stop there, because the same way of the life is being followed in many places of the Christians communities according to their present context.

The theologian Aloy Peris points out some four vital elements which were prevailing in the experiment of the early Christian communities.

- They shared everything in common, no one was in need.
- Community living, beginning from small cells.
- Sharing of the Eucharist in the circled table.

- Leadership by men and women heading towards mission.

History repeats, again we face a world with a great piramidal structure. We are to respond to the need of the time as Christians. Let's go with brave faith in God as small communities, as David faced Goliath with small stones.

Let's work for the dream of Jesus to be realized in the present world.

Are we really ready to bear the dream of Jesus?

## Church in the signs of the time: Church of the poor

Journeying in the world of science with immense advancement in technology man is still said to be worthwhile in the creation of God. On the other hand in the field of well being man has won successfully designed and made artificial things and hopes to develop artificial heart. But on the other hand man is thoroughly disturbed and confused my many factions such as war, violence, poverty, globalisation and debt etc. The hardships and the struggles he undergoes in his day to day life questions his existence on earth. His life is filled with miseries, frustrations and sorrows. The result is he makes attempts even to the point of death. Therefore, it becomes the prime duty of the church to identify the needs of the people and to make them realize the need of leading a virtuous lift that pleases God.

Having walled for 50 years after the 2nd Vatican council the church has to make a renewal within itself and to promote something for the welfare of the people. The church has to answer their problems in the light of the gospel.

In the O.T we find that a group of people called 'Anavim' who were oppressed by the kings and high authorities. They did not have anything to keep their lives. They were always depending on God's hand. They did not have any power or strength in the society. They were the helpless people. So God helped them in various ways. In the N.T Jesus loved the oppressed the poor and the rejected people rather than the rich and those who were in high positions. From the Sermon on the Mount we find that Jesus always focuses on the poor people.

Our new pope Francis is a humble and simple man. From his first day onwards he has spoken many things about the poor. As we all know that he has made a new revolution in the Church, that is he asked the church to be come simple and poor. He is a man of simplicity and a man of prayer. His life style has shown lot of things to the world. He wishes and expects the church to love the people and to uplift them by sharing our resources.

## The Characteristics of Discipleship (Mark 10:46 - 52)

A disciple is one who follows his master's principles and his way of life. Jesus called some of his followers to be his disciples. In the Gospel of Mark, though the disciples were called by Jesus and they were with him during his preaching and ministry, they failed to understand Jesus and his ministry totally. Jesus himself had scolded them for their lack of understanding and faith. In a special way, in the narrative section of Jesus' journey towards Jerusalem (8:31-10:52), we find a series of misunderstandings of the disciples about Jesus' ministry and his discipleship. In this narrative context, the Gospel presents an episode of the healing of the blind Bartimaeus and shows the basic characteristics of discipleship.

1. A disciple is one who understands who Jesus is.

Though the disciples and the people were following Jesus on the way to Jerusalem, the blind Bartimaeus who was sitting by the roadside identified who Jesus is: 'Jesus, Son of David.'

2. A disciple is one who expresses his strong faith.

Bartimaeus expressed his faith in Jesus through his act of crying aloud 'Jesus, Son of David' amidst of threatand by the way he threw off his cloak.

3. A disciple is one who should not seek priority and positions.

When Jesus asked Bartimaeus 'What do you want me to do for you?' he answered that he wanted sight, the basic need of his life. But when Jesus asked the same question from his disciples, James and John, they asked for priority places.

4. A disciple is one who follows Jesus on his way.

When Jesus healed people, he asked them to go home. The same request was given to Bartimaeus. But he instead of going home, he followed Jesus on his way.

We are called to be Christians through baptism. If we want to be faithful disciples of Jesus we need to observe the above basic characteristics of discipleship.

## The Theme of Prayer in the Gospel of Luke

Prayer always has been and always will be a staple element of Christian practice. It is the heartbeat of life. Jesus devotes much time both in prayer and I teaching his disciples to pray.

Jesus was in complete submission to His Father's will. He depended on prayer especially on major events of his life. Whenever he needed courage,

strength, or fellowship with the Father, prayer was His reliance. These prayers were not only personal also often conducted in private, not crowd places.

All the four gospels mention that Jesus devotes time for prayer but among them the Gospel of Luke has more to say about prayer than other gospels. Luke speaks of the prayer of Jesus in eight further circumstances. Because prayer is a significant motif in Lucan writings as both terminology and the context. Luke gives emphasis to prayer in three ways

**1) Prayer in the life of Jesus**

The prayer instances recorded in Luke's gospel, there are eight texts that relate to prayer in the life of Jesus. Jesus prayed especially on major events of His life.

He prayed at his baptism (3:21), Routine prayer (5:16), before He chose the twelve (6:12), Before Peter's confession (9:18-27), at the transfiguration (9:29), intercession for Peter (22:32), Prayer on the Mount of Olives (22:39-46), and prayer on the cross (23:46).

**2) Teaching of Jesus on prayer**

The success of Jesus' ministry through his prayer life, prompted the disciples to request that he should teach them how to pray. As a result Jesus introduced them the 'Lord's prayer'(11:2-4) then he taught about attitudes in prayer, which consisted of three parables such as parable of the midnight friend (11:5-13), the parable of the unjust judge (18:1-8), the parable of the Pharisee and the tax collector (18:9-14).

**3) Prayer of others**

There are few prayer references apart from the above two distinctions. Such as Prayer of Zechariah and Elizabeth for a son (1:13), Simeon's prayer of thanks giving (2:26-32), Prayer of Anna (2:36-38). Further there are some

instances where Jesus exhorted his disciples to pray. "pray for those who ill-treat you" (6:28), "pray for workers for the kingdom of God" (10:2), "pray that you will not fall into temptation (22:40,46).

In his Gospel Luke has tried to impress upon the reader the importance of prayer by demonstrating the attitude of Jesus to prayer and the frequency with which he prayed. Jesus as a perfect human sought the will of God through prayer. Likewise the Christian life is to be a life of prayer founded upon the Father- son relationship that God has established through Jesus.

## Abortion uproots Human Dignity

The post modern and globalized world is confused in distinguishing what is right and what is wrong or what is moral and what is immoral. All kinds of people, irrespective of their race, state and language are drawn towards the deception of the world. This tragic situation simply came up with the fast development of science and technology and above all the hi-fi life style of this present generation. Thus the moral principles of human beings and their life pattern are often questioned. Though the modern science helps in the life style of man, it has failed to bring up moral values among men. Because, life of human beings have become a commodity which could be bought over the counter. This tragic situation begins from the very conception of a human life. It is abortion which destroys human dignity and it is one of the serious problematic issues in the world of religion. So, Abortion is a serious problem the church faces among her faithful and in the world.

Abortion is the termination of a pregnancy and expulsion of fetus from the uterus resulting in the death of the embryo by human intervention, either by killing him before removal from the womb or by exposing him to a certain death outside the womb. There are two types of abortion we can see at present. They are direct abortion and indirect abortion. The circumstances which are alleged as justifying reasons for abortion are called indication. Four indications are distinguished -

eugenic, ethical, social and therapeutic. By making use of the 'principle of double effect' sometimes indirect abortions are permissible.

Taking into consideration the human lives the Magistarium of the Church absolutely disapproves of any kind of abortion.

## Family – Temple of the Holy Spirit

As we are in the year of the family this article based on moral theology, deals with the current issues of the family and the expectations of the Church.

Marriage is a sacred bond between a man and a woman. Marriage is a covenant, by which a man and a woman establish between themselves a partnership of their whole life, and which of its very nature is ordered to the well-being of the spouses and to the procreation and upbringing of children. It is also a great vocation and a sacrament as well as a social institution.

The marital covenant based on the free choice of the spouses, involves an interpersonal relationship which is total, i.e. involving their spiritual, emotional, and physical union. Aided by grace, the two are able to give themselves to one another on a day – to – day basis, thus bringing the object of the covenant, the community of the whole of life, into reality.

Vat. II praises marriage as "a lofty vocation" (GS 47 a). Hence Christian young men and women should examine themselves before God whether they are called to marriage and have the necessary qualities. According to Vat. II, Christ comes into the lives of married Christians through the sacrament of matrimony and abides with them thereafter, so that they may love each other with perpetual fidelity (GS 48). According to the Scriptures, marriage is instituted by God as a community of love and as a life –giving community. This community is called the family. There are two equally important ends of marriage: (1) procreation and education of children, and (2) mutual assistance and completion in

love. These correspond to the procreative and unitive purpose of sexual love.

Since both the husband and wife are together charged with the responsibility of bringing forth and bringing up children, the number of children to be had should not be left to chance but to the conscientious decision of the couple. In this sense, the planning of the family is not only advisable but is necessary for a successful and happy marriage.

This article also deals with some current problems concerning parenthood. They are; artificial insemination, In Vitro Fertilization and surrogate motherhood. When the spouses are alert and careful to observe the properties of marriage i.e. unity and indissolubility, their life will be blessed and holy. Thus every family becomes the family of the Holy Spirit.

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 120/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 16
Euro 14

தனிப்பிரதி 55/=


தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2482, 021 222 7145


# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription: Local (Incl. postage) Rs. 120/=
Foreign (Incl. postage) U.S.$ 16
Euro 14
Single Copy Rs. 55/=


Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145



Design & Print
Judeson